குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 ] சோபகிருது ஆண்டு மார்கழித் திங்கள் 10—1—64 [ இதழ



தான்யலக்ஷ்மீ

வரதாபய ஸம்யுக்தாம் கிரீட மகுடோஜ்வலாம் ।
அம்புஜம் சேக்ஷுசாலீம்வா கதலீபல த்ரோணிகாம் ।
பங்கஜம் தக்ஷவாமேது ததானம் சுக்லரூபிணீம் ।
க்ருபாமூர்த்திம் ஜடாகூடாம் ஸுகாஸன ஸமன்விதாம் ।
ஸர்வாலங்காரஸம்யுக்தாம் ஸர்வாபரண பூஷிதாம் ।
மதமத்தாம் மனோஹாரிரூபாம் தான்யச்ரியம் பஜே ।

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

உரையிறந்தால் உன்னும்
உணர்விறந்தால் மாயைத்
திரையிறந்தால் காண்கின்ற
தேவை — வரைபெருக
வாசிப் பதும்நாவால்
வாழ்த்துவதும் நாடகமாப்
பூசிப்ப தும்சுத்தப்
பொய். 13


ஆசிரியர் :-

வித்துவான்,

**சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்**

துணையாசிரியர் :-

வித்துவான்,

**சொ. சிங்காரவேலன், M. A.**



உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

**தருமையாதீனத் திங்கள் இதழ்**

| மலர் 23 | 10-1-64 | இதழ் 2 |
|---|---|---|


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | "என்ன குறையும் இலோம்!" | ... 77 |
| 2 | வந்தது பொங்கல்! | ... 81 |
| 3 | வணக்கம் | ... 82 |
| 4 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை | ... 83 |
| 5 | சித்தாந்த வினவிடை | ... 93 |
| 6 | சஹஸ்ராகமம் | ... 100 |
| 7 | திருக்கோயில் அமைப்பு முறை | ... 104 |
| 8 | அருள்வாக்கு - V | ... 107 |
| 9 | சமயமும் இளைஞர்களும் | 110 |
| 10 | வாழியாதனின் வள்ளன்மை | ... 115 |
| 11 | தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரைகள் | ... 120 |
| 12 | செய்திகள் | ... 123 |
| 13 | எதிர்காலம் | ... 137 |


## அட்டைப்பட விளக்கம்

தை மாதம் தானியம் கொழிக்கும் காலம். வளம்தந்த தான்ய லக்ஷ்மியை வணங்கி வாழ்த்துவோம்.

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 ] சோபகிருது - மார்கழி - 10—1—64 [ இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## "என்ன குறையும் இலோம்!"

ஞானசிரியனுடைய அருளாலேயே மாணக்கன் உய்தி பெறமுடியும். மீனினுடைய பார்வையில் அதன் குஞ்சுகள் நலம்பெறுவதுபோன்று ஞானசிரியனுடைய கடைக்கண் ணேக்கமே பக்குவியான சீடனை வாழ்விக்கின்றது. குருவருள் வழியே திருவருள் பெறுவது என்பதே சைவசித்தாந்தச் செந்நெறி. நம் சிவநெறியில் அடங்கன்முறையாகிய ஏழு திருமுறைகளை அடுத்துத் திருவாசகம் அமைந்த பேற்றி, திருவருளை அடைதற்குரிய உயிர்கள் அடுத்துப் பற்ற வேண்டியது குருவருளையே என்பதை விளக்குவதாகும். திருவாசகமே குருவருள் விளக்கமாக - குருவருள் ஒளி வீசும் சிந்தாமணியாக - விளங்குகின்றது. சிவஞானபோதத்தில் எட்டாம் சூத்திரம் குருவருள் கூறுவதாகும்; எட்டாம் திருமுறையாக உள்ள இத் திருவாசகமும் இவ்விளக்கமாக இருத்தல் எண்ணி மகிழத்தக்கதாகும். குருந்தமரத்தடியில்

ஆசிரியக் கோலம் கொண்டு எழுந்தருளிய பெருமானுடைய பேரருள் வெள்ளத்தை முற்றப்பெற்று அவ்வானந்தக் கடலில் திளைத்து ஆடினர் மணிவாசகப் பெருமான்; ஆனந்த பரவசம் எய்தினர்; ஆனந்தாதீதம் அடைந்தார். 'பண் களிகூர்தரு பாடலோடு ஆடி'ப் பரமானந்தப் பழங் கடலிற் படிந்தார்.

படிந்து, தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்து இனிய கோனவன்போல் வந்து என்னைத் தன் தொழும்பிற் கொண்டருளும் வானவன் பூங்கழலே' பாடுதும் என்று பாட்டிசைத்தார்; 'ஊனாய் உயிராய் உணர்வாய் என்னுட் கலந்து தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய் வானோர் அறியா வழி எமக்குத் தந்தருளும் தேனார் மலர்க் கொன்றைச் சேவகனார்' என்று வாயாரப் பாடிப் பேரின்ப வெள்ளத்தில் துளையமாடினர். அப்பெருமானுடைய பக்தி இடையறாப் பேரன்பு; 'உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாய் உருகிய நல்லன்பு; அழுது அழுது ஆரா அமு தினைப் புல்லிப் புணர்ந்து இன்புற்ற தலையன்பு, 'என்ன குறையும் இலோம்; எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு' என்ற குறைவிலா நிறைவு உடைய கோமானாய் வாழ்ந்த மணிவாசகரின் திருவாசக நெறி உலகெலாம் போற்றும் நெறியாக ஒளிர்கின்றது. 'நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந் துருக'ச்செய்யும் திருவாசகத்தின் நடுநாயகமாய் விளங்கும் திருவெம்பாவையை நாவாரப் பாடி, செவியாரக் கேட்டு, மனமார அமைத்து அன்புலகு மகிழ்ந்த மார்கழித் திங்கள் மலர்ந்து நிறைந்து தைத்திங்கள் பிறக்கும் இனிய சூழ்நிலை. இந்நிலையில் "ஞானசம்பந்தம்' தன் பொங்கல் வாழ்த்துக் களைச் சமய உலகுக்குச் சமர்ப்பிப்பதுடன், சமய வாழ்வும் பக்திநெறியும் இன்றுபோல் என்றும் பொங்கித் தழைத்து, தமிழ்கூறு நல்லுலகு செழித்தல் வேண்டும் என்று செந்தமிழ்ச் சொக்கர் சேவடிகளில் பிரார்த்தனையும் செய் கின்றது.

திருவாசகத்தின் குருவருள் விளக்கம் அன்பர்கள் ஆழ்ந்து சிந்தித்தற்குரியதாகும்; தை பிறந்ததும் வழி பிறக்குமா என்று எதிர்நோக்கும் அன்பர்களுக்கு. திருவாசகம் வழிபிறக்கவும் வகைசெய்யும்; என்ன வழி? அன்புவழி; அறவழி; இன்பவழி; ஒளிவழி; அருள்வழி;

வீட்டுலகை அடைவித்துச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வைத் தந்தருளும் தவவழி.

நல்வழி காட்டும் நாயகனும் சிவபிரான் தமக்குக் காட்டியருளிய வழி எது என்று மணிவாசகப் பெருமான் தித்திக்கும் செந்தமிழில் திருவுளம் கனிந்து அருள்கின்றார்; அழகமர் திருவுருவுடன் நீற்றுக் கோலத்துடன் உள்ளான் பெருமான். ஊனங்களையெல்லாம் ஒருங்கு அளிக்கின்ற ஆனந்தமே அவனுக்கு ஆருக அமைகின்றது. தன் உடம்பில் ஒருகூருய் அம்மையை வைத்துள்ள மாப்பெருங் கருணை வள்ளலாக உள்ள அவன் மருங்கிலே நாதப் பெரும் பறை நவின்று கறங்குகின்றது. அழுக்கு அடையாமல் ஆண்டு கொண்டருளும் அவ்வண்ணல் கையிற் பிடித்திருப்பது சூலம் ஆகும்; அது ஞாலங்களைக் காக்கும். உயிர்களின் வினைகட்கெல்லாம் மூலமாகிய மும்மலங்களை அறுக்கும் தூல அருட்டிருமேனியையுடைய அம்முதல்வனுடைய சுடர்விடு சோதி கண்களையும் கருத்தையும் கவர்வதாக இருக்கும்; கழுநீர் மாலை யணிந்த கருணையாளன்; அத்தகு பெருமான் உத்தரகோசமங்கை ஊராகவும், அருள் மலையாகவும், பாண்டிநாடே பழம் பதியாகவும் உடையவன்; அவன் காட்டும் வழியே நல்வழி; 'மீண்டு வாரா வழி' என்கின்றது திருவாசகம், அவ்வழியே நாமெல்லாம் செல்லத் தக்க அருள்வழி யாகும். தை பிறந்து மகிழும் தமிழ்ப் பெருமக்கள் இவ்வழி பிறக்கவும் ஆவன செய்தல் வேண்டுமன்றே?

பிரபஞ்ச மயல்நீங்கிப் பரபோகமாகிய இன்பத்தைக் கூடுதற்குரிய உபாயத்தை எடுத்துரைக்க முற்படும் அடிகள் இவ்வழிபற்றித் தம்மை வருக என்று அருள் புரியவேண்டும் என்று பெருமானிடம் விண்ணப்பிக்கும் திருப்பாடல்கள் பல உண்டு. 'வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்' என்கின்றார் அடுத்தடுத்து; ஆனால் அதற்குப் பற்றற்ற வாழ்வு வேண்டும் என்ற அடிப்படைக் காரணமும் அருளியுள்ளார்; 'பண்ணினேர் மொழியாள் பங்க நீயல்லால் பற்றுநான் மற்று இலேன்' என்று உறுதியாகக் கொண்ட உள்ளமே அத்தகு வழியை அடிகட்கு அருளிற்று. நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை அன்றாலின் கீழ் இருந்து அங்கு அறம் உரைத்த' பெருமானையே ஞானாசிரியராகக்கொண்டு உய்ந்த அடிகள் 'மாலும் காட்டி வழிகாட்டி வாரா உலக நெறியேறக் கோலங்காட்டி யாண்டான்' என்று

கூறும் பகுதியும் ஒப்பிட்டுணர்தற்குரியதாகும். சிவானந்த மேலீட்டில் இசைக்கும் ஆனந்த மாலேக்கண் அமைந்த இத் திருப்பாடல் 'வழி பிறக்க' வகைசெய்யும் வான்புகழ் உடையதாகும். 'ஓடும் கவந்தியுமே உறவு' என்று கொண்டு, உள்கசிந்து 'தேடும் பொருளும் சிவன் கழலே' எனத் தெளிந்த அடிகள் இத்தகு வழி கண்டமையாலேயே, 'என்ன குறையும் இலோம்' என்று கூறிச் செம்மாக்கும் உயர்நிலையை உற்ருர்.

'முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனுய் உள்ள பெருமானை வழிபட்ட மகளிர் அடியவர் தாள்பணிந்து ஆங்கவர்க்குப் பாங்காகி நிற்க விழைந்து வேண்டிப் பெற்ற நிலையில் 'இன்ன வகையே எமக்கு எங்கோன் நல்குதியேல் என்ன குறையும் இலோம்' என்பதாகப் பாடுகின்ருர் அடிகள். இத்தகு குறைவற்ற வாழ்வுடைமையாலேயே 'ஞாயிறு எங்கு எழுந்தால் என்ன' என்ற கவலையற்ற செம்மாப்பு அடிகட்கு வாய்ப்பதாயிற்று.

> "தாகம் மறந்து சதுர்மறந்து தான்மறந்து
> தேகம் மறந்து அட்டமா சித்திமறந்து — ஆகத்தின்
> வந்ததறியா திருந்து மாருச் சிவானந்தம்
> சந்ததம் வாழ்வார்க்கு ஆர்சரி"

என்று தருமையாதீன முதற்குரவராகிய ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகள் கூறியருளிய சிவபோகசாரம் இவ் விடத்து அறிந்துணரத் தக்கது.

தைத் தலைநாளில், குருவருள் விளக்கமாகத் திகழும் திருவாசகத்தில் மணிவாசகர் காட்டும் குறைவிலா நிறைவு நெறி - சிந்தித்து, அந்நெறி நிற்க அன்புலகை ஆற்றுப் படுத்துகின்ரேம். தருமையாதீனம் 25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் மார்கழித்திங்களில் பாவை நெறியைப் பல மாநாடுகளால் விளக்கியருளியதால் பயனடைந்த சமய உலகு, திருவாசக நெறிக்கண் மேலும் தலைப்பட்டு அன்பு வளம் பெருக்கி ஆன்மலாபம் அடைந்து உய்ந்தின்புறுமாக.

உ

சிவமயம்

# வந்தது பொங்கல்!

புலவர் - வேலன்

இன்பம் தழைக்க இடர்கள் பொடிக்க
இங்கே வந்தது பொங்கல்! — அன்புப்
பங்காய் நின்றது பொங்கல்!
அன்பு செழிக்க அறமே பெருக்க
அன்பாய் வந்தது பொங்கல்! — நெஞ்சத்
தெம்பாய் வந்தது பொங்கல்! 1

சைவம் விளங்கச் சாந்தம் துலங்க
சால்பாய் வந்தது பொங்கல்! — இன்பச்
சான்ருய் வந்தது பொங்கல்!
தெய்வம் புரக்கத் தேயம் சிறக்கத்
தெளிவாய் வந்தது பொங்கல்! — பண்புத்
திறமாய் வந்தது பொங்கல்! 2

பண்பே கொழிக்கப் பாட்டே விழிக்கப்
பரிவாய் வந்தது பொங்கல்! — கவிதைப்
பதமாய் வந்தது பொங்கல்!
வண்மை பிறங்க வாய்மை இலங்க
வாழ்வாய் வந்தது பொங்கல்! — தமிழர்
வளமாய் வந்தது பொங்கல்! 3

# வணக்கம்

பொங்கற் புதுநாளை முன்னிட்டுக்கொண்டு வரும் நமது ஞானசம்பந்த இவ்விதழில் பொங்கல் வாழ்த்து, பொலிவைத் தருகின்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் தமது அரிய அருளுரையை இதிலும் வழங்கியுள்ளார்கள். சித்தாந்த சாத்திரத்தில் இரண்டாவதாகிய திருக்களிற்றுப்படியாரின் தலையாய கருத்துக்களை அவர்கள் ஆங்காங்குப் பல திருமுறைச் சான்றுகளுடனும் நாயன்மார்களது வரலாறுகளுடனும் இணைத்துக் காட்டியருளிய விளக்கங்கள் பலருக்கும் சைவ சாத்திர ஞானத்தைத் தருவதுமட்டுமன்று; தோத்திரங்களாகிய திருமுறைகளிலும், நாயன்மார்களது அருள் வரலாறுகளிலும் பெரிதும் ஈடுபடுத்துவதுமாகும்.

முன் இதழ்களில் தொடர்ந்து வந்த சித்தாந்த வினாவிடை, சகஸ்ராகமம், கோயில் அமைப்பு, அருள்வாக்கு, எதிர்காலம் என்பவை இவ்விதழிலும் தொடர்ந்து இடம்பெற்றுள்ளன. 'வாழியாதலின் வள்ளன்மை' என்னும் புதிய கட்டுரை இவ்விதழில் சிறப்பாக அமைந்து சங்கத் தமிழ்க்காலத்தை நாம் நம் அகக் கண்ணால் கண்டு களிக்கச்செய்கின்றது. இடையில் சில தடைகளால் தொடர்ந்து நின்றிருந்த தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரையும் இவ்விதழில் தொடரப் பெற்றுள்ளது.

திருத்தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான, மாயூரம் வள்ளலார்கோயிலில் பல பெருமக்கள் ஆராய்ச்சிவல்லுநர்கள் ஆற்றிய சொற்பெருக்கு, இசைவல்லுநர் முதலியோரது இசையரங்கு, மற்றும் பொம்மலாட்டம் முதலிய கலை நிகழ்ச்சிகள் முதலியவற்றுடன் மூன்றுநாட்கள் நடைபெற்ற பாவை மாநாடு, மார்கழித்திங்கள் முழுவதிலும் ஆதீனத்தின் மற்றைய தேவஸ்தானங்களில் நிகழ்ந்த பாவை மாநாடுகள் இவற்றின் நிகழ்ச்சிகள் பலவும் அனைவரும் அறிந்து அகமகிழும் வகையில் இடம் பெற்றுள்ளன. இச் சிறந்த இதழை நேயர்கள் பொங்கற் புதுநாளுக்கு முன்னரே பெற்றுப் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

உ
குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

## திருக்களிற்றுப்படியார்

அம்மையப்ப ரேஉலகுக் கம்மையப்ப ரென்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர்—அம்மையப்பர்
எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பார் அவர்.

— திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனர்.

உலகில் உள்ள உயிர்கள் யாவும் அம்மையப்பரை உடையனவே. அம்மையப்பர் - தாய் தந்தையர் இல்லையென்றால் எந்த உயிரும் இல்லை. ஆனால் ஓர் உயிருக்குத் தாய் தந்தையாய் இருப்பவரும் தங்களுக்கு ஒரு தாய் தந்தையை உடையவரே யன்றித் தாய் தந்தை இல்லாதவரல்லர். அப்படிப் பார்க்கும் பொழுது தமக்குத் தாய் தந்தையர் இல்லாது, தாமே எல்லாருக்கும் முதல் தாய் தந்தையராய் உள்ளவர் இருத்தல் வேண்டுமன்றோ? அவர்கள் யார்? அவர்கள் தாம் சத்தியும் சிவமும், சத்தி. தாய் - அம்மை. சிவம், தந்தை - அப்பன்.

உலகில் காணப்படும் தாய் தந்தையர்போலச் சத்தியாகிய தாயும் சிவமாகிய தந்தையும் இருவரல்லர்; ஒருவரே. முதற் பொருளாகிய பரம் பொருளின் இருகூறுகளே அவர்கள். அஃதாவது உலகம் எல்லாவற்றிற்கும் முதலாய் உள்ள ஒரு பெரும்பொருளே ஒருகூறு, 'சத்தி' எனவும் மற்றொரு கூறு, 'சிவம்' எனவும் இருதன்மைப்பட்டு நிற்கின்றது. இம் முதற் பொருளையே, 'இறை, கடவுள், பரப்பிரமம்' என்றெல்லாம் பெரியோர் கூறினர்.

இறைவனுக்கு உள்ள பல பெயர்களில், 'ஆதி' என்பது ஒன்று, 'முதலில் உள்ளவன்' என்பது இதன் பொருள். 'முனைவன், முன்னோன்' என்ற பெயர்களும் இந்தக் காரணத்தையே குறிப்பன. "ஆதீ உன்னையல்லால் அடையாதென தாதரவே" (சம்பந்தர் தேவாரம்), "ஆதியான் அண்ட வாணர்க் கருள் நல்கும் - நீதியான்" (அப்பர் தேவாரம்), "ஆதியன் ஆதிரையன் அயன் மாலறிதற் கரிய - சோதியன் (சுந்தரர் தேவாரம்), "முனைவனே முறையோ", "முன்னோன் காண்க முழுதோன் காண்க" (திருவாசகம்) என்பனபோல இப்பெயர்கள் திருமுறைகளில் வருதலைக் காணலாம். எனவே. முதற்கண் உள்ளதாகிய இத்தன்மையைக் குறிப்பதே, 'அம்மையப்பர்' என்னும் நிலை என்பது புலனாகும். முதற் பொருளை, 'சத்' என்னும் பெயராற் குறிப்பிடுகின்ற உபநிடதங்களும். சத்தே முதற்கண் உள்ளதாகக் கூறும் (सदेव सौम्येत मग्र आसीत् சாந்தோக்கியம்.)

இவ்வம்மையப்பர் வடிவத்தை உடையவன் யாவன்? சிவபெருமான் ஒருவனே. அவன் தனக்கு ஒரு தாயும் இலி; தந்தையிலி; தான் தனியன் என்பது எங்கும் சொல்லப்படுவது. இவ்வம்மையப்பர் வடிவத்தைப் போற்றி வழிபடுவோர் யாவர்? சைவர்களே. புறச் சமயிகளாகிய பௌத்த சமணர்கள் கடவுளுக்கு மனைவி இருப்பதாகச் சொல்வதே பிழை என்கின்றனர். அவர்கள் உலகத்தில் உள்ள ஆண் பெண் என்ற இருபெரும் பிரிவுகளில் ஒரு பெரும் பிரிவாகிய பெண் இனத்தையே அடியோடு வெறுக்கின்றவர்கள். இதில் சமணர்கள் மிகத் தீவிரமானவர்கள். அவர்கள் பெண்களுக்கு மோட்சம் இல்லை என்று கூடச் சொல்லிவிட்டார்கள். அவர்கள் தாயர் இன்றியே பிறந்தவர்கள் போலும்! சைவர்கள் அம்பிகையைச் சிவபெருமானோடு ஒரு நிகராகக் கொண்டே வழிபட்டுவருவது உலகம் அறிந்தது, திருஞானசம்பந்தரது திருப்பதிகங்களில் அம்பிகையின் பெருமையே முதற்கண் பேசப்படுதலைப் பல திருப்பாடல்களிற் காணலாம்.

வைதிக சமயங்களிலும் பிற சமயங்களில் இறைவியை இறைவனுக்கு வேறாக வைத்தே வழிபாடு செய்யப்படுகின்றது. ஆனால், இறைவனையும் இறைவியையும் ஓர் உருவத்திலே செம்பாதியாக - மாதிருக்கும் பாதியனாக (அர்த்தநாரீசுவர வடிவமாக) வைத்துச் செய்யும் வழிபாடு சைவசமயம் ஒன்றிலேதான் காணப்படுகின்றது.

"தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்

சூலமுந் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ ''

என்று, 'இதுவே பழமையான கோலம்' என்கின்றது திருவாசகம்.

இவ் வர்த்தநாரீசுவர வடிவம் எதனைக் காட்டுகின்றது? 'சிவம், சத்தி' என்னும் இரண்டும் வேறு வேறு தனிப் பொருள்கள் அல்ல; ஒருபொருளின் இருகூறுகளே; அஃதாவது, முதற்பொருள் ஒன்றே, 'சத்தி, சிவம்' என இருதன்மைப் பட்டுத் 'தாதான்மியமாய் இயைந்து நிற்கின்றது' என்னும் உண்மையையே காட்டுகின்றது. ஆகவே, 'சத்' என்றும், 'ஆதி' என்றும், 'முனைவன்' என்றும், 'முன்னோன்' என்றும் இவ்வாறெல்லாம் புகழ்ந்து பேசப்படும் பரம்பொருளின் வடிவம் அம்மையப்பர் வடிவமே என்பது தெளிவாக விளங்குகின்றது. இதனையே, "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக" என்று விளக்கியது, மேலே காட்டிய வெண்பா.

புறச் சமயங்கள் இவ்வடிவத்தைப் போற்றுமையேயன்றி இகழவும் செய்கின்றன. அதனால், சைவசமயத்தில் அன்றி வேறு எங்கும் இவ்வுயர்ந்த உண்மையைக் காணல் இயலாது என்பது விளங்கும். இதுபற்றியே, "சைவத்தின்மேல் சமயம் வேறு இலை; அதில் சார் சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வம் வேறு இல்" என்றும், 'இது நான்மறைச் செம்பொருளாகிய வாய்மை என்றும் கூறினார், ஒரு பெரியார் (சைவ எல்லப்ப நாவலர்).

எல்லா ஞானங்களிலும் மேலான ஞானமாகிய சிவ ஞானத்தை விளக்கும் சைவ சித்தாந்த சாத்திரங்களுள் முதலாவதாகிய திருவுந்தியாரின் வழிநூல் திருக்களிற்றுப்படியார். இதுவே சித்தாந்த சாத்திரங்களுள் இரண்டாவதாகும். இது, திருவுந்தியாரில் குறிப்பாகவும், சுருக்கமாகவும் சொல்லப்பட்ட கருத்துக்களை, விளக்கமாகவும், விரிவாகவும் எடுத்துக் கூறுவது.

இதன் ஆசிரியர், திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார். இவர் திருவுந்தியாரின் ஆசிரியராகிய திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார்தம் மாணாக்கர்க்கு மாணாக்கர். ஞான சந்தானத்தில் பெயரர் என்ற முறையில், முதல்நூல் ஆசிரியரது பெயரே இவருக்கும் தீட்சா நாமமாக இடப்பட்டது. இச்சந்தான வரன் முறையை இவ்வாசிரியரே இந்நூலுட் கூறியுள்ளார்.

இத் திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார், தம்மை அடைந்த பக்குவம் உள்ள மாணாக்கர் ஒருவர் பொருட்டு இந் நூலைச் செய்தளித்தார். இதன் அருமை பெருமையை உலகம் உணர்ந்து உய்தற்பொருட்டு நடராசப் பெருமான் தில்லையில் தனது கனக சபையில் உள்ள திருக்களிற்றுப் படியில் (பஞ்சாட் சரப் படியில்) இந்நூலை இவ்வாசிரியர் வைக்கப் புகும்பொழுது, அதில் உள்ள களிறு (யானை) தனது துதிக்கையை நீட்டி வாங்கித் தனது திருவடியில் வைக்கச் செய்தருளினான். அக்கார ணம் பற்றியே, இந்நூலுக்கு, 'திருக்களிற்றுப்படியார்' என்பது பெயராயிற்று.

இந்நூல், தனது முதல் நூலாகிய திருவுந்தியாரின் பொருளை விளக்கும் முறை மிகவும் அழகிது. அதற்கேற்ப நூலின் வெண்பாக்களும் மிக அழகாக அமைந்துள்ளன.

'இறைவனை அடைதற்கு முதலில் அவனைப்பற்றிய அறிவு உண்டாக வேண்டும்; பின்பு அந்த அறிவு முற்றி முதிர்ந்து அன்பாக மாறவேண்டும்; அத்தகைய அன்பு பெருகப்பெற்ற வர்களே அன்பே சிவமாய் அமர்ந்திருப்பார்கள்; அந்த அன்பு வாய்க்கப் பெறாதவர் இறைவனை அடைதல் இயலாது; இது, சைவத்தின் சாத்திர தோத்திரங்கள் அனைத்திலும் ஒரே வகை யாகச் சொல்லப்படும் உண்மை. இவ்வுண்மை திருக்களிற்றுப் படியார் என்னும் சாத்திரத்தில்தான் தெளிவாகவும் விரிவாக்வும் கூறப்படுகிறது.

அன்பே இறைவனை அடைதற்கு உரிய வழியாய் இருத்தற் குக் காரணம், அன்பினால்தான், 'நான்' என்னும் சீவபோதம் கெடுகின்றது. இந்த அன்பு தோன்றுதற்கு வழி, சிவதன்மமும், சிவயோகமும், சிவஞானமும் ஆகும் என்கின்றது திருக்களிற்றுப் படியார்.

" நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நான்அழிய - வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணா அரன் " (15)

என்பது அவ்வரிய வெண்பா. சரியை, கிரியை என்னும் இரண்டும் இங்கு, 'சிவதன்மம்' எனப்பட்டன.

சரியை கிரியைகளாகிய சிவதன்மத்தை, 'மெல்வினை, வல் வினை' என இரண்டாகப் பிரித்து, 'எல்லா மக்களும் எளிதில்

செய்தற்கு உரிய சரியைத் தொண்டு, கிரியைத் தொண்டுகள் பலவும் மெல்வினை' என்றும், 'சிறுத்தொண்டர், சண்டீசர், அரிவாட்டாயர் முதலிய நாயன்மார்கள், தம் பிள்ளையைத் தம் கையாலே அறுத்துக் கறிசமைத்து அடியவர்க்கு அமுது அளித்தது, சிவபூசையை அழிக்கப்புகுந்த தந்தையின் காலை வெட்டியது, நிவேதனத்திற்குக் கொண்டு சென்ற பொருள்களைக் கமரில் தவறிக் கொட்டிய குற்றத்திற்காகத் தமது கழுத்தைத் தாமே அரிவாளினால் அரிந்துகொண்டது போன்ற அரிய செயல்கள் வல்வினை' என்றும் விளக்குகின்றது திருக்களிற்றுப்படியார்.

இறைவனது ஒப்புயர்வற்ற பெருமையை அறிவதே ஞானம். அந்த ஞானம் அருள் நிலையாகிய துரிய நிலையை அடைவிக்கும். அதற்குமேல் அவனை, கனியினும் கட்டிபட்ட கரும்பினும், பனி மலர்க்குழற் பாவை நல்லாரினும், தனிமுடி கவித்து ஆளும் அரசினும் இனியவனாக உணர்ந்து மீதூரப்பெறும் அன்பு உண்டாகுமாயின், அதுவே ஆனந்த நிலையாகிய துரியாதீத நிலையில் சேர்க்கும். இந்நிலையே, 'சாக்கிரத்தில் அதீதம், நிட்டை நிலை' என்றெல்லாம் சொல்லப்படும். இந்நிலையை அடைந்தவர்கட்குத்தான், 'நான்' என்னும் சீவபோதம் அறவே நீங்கும்; சிவமாம் தன்மை வாய்க்கும். அப்பொழுதுதான், சீவ கரணங்கள் எல்லாம் சிவகரணங்களாய்த் திகழும். இச் சிவமாந் தன்மையை எய்தியவர்களையே பிற உயிர்களின் பொருட்டுச் சிவன் துரிய நிலையில் நிற்கச் செய்து, ஆசாரியப் பெருமக்களாக உலகத்திற்கு வழங்கி, தான் உலகிற்குச் செய்ய நினைக்கும் அருட் செயல்களை யெல்லாம் அவர்கள் வாயிலாகச் செய்தருளுவன். இவ்வுண்மையையும் நாம் திருக்களிற்றுப்படியாரிலேதான் உணர்கின்றோம்.

"துரியங் கடந்தசுடர்த் தோகையுடன் என்றும்
பிரியாது நிற்கின்ற பெம்மான் — துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யும் தன்மைகளும்
ஆக்கியிடும் அன்பர்க் கவன்" (69)

என்பது அத் திருவெண்பா. இதனை அடுத்து, 'அவ்வாறு இறைவன், சாக்கிர துரியத்தைத் தந்து, தான் செய்யும் செயல்களை அவர்கள் வாயிலாகச் செய்யப்பெற்ற அன்பர்கள் யாவர்?' என்னும் வினாவிற்கு விடையாக, திருஞானசம்பந்தர் முதலிய சமயாசாரியர் நால்வர்களையே வைத்து, அவர்களால் நிகழ்த்தப் பெற்ற அற்புதங்களை முறையாக ஒவ்வொரு வெண்பாவால் அந்நூல் கூறுகின்றது.

"ஓடம், சிவிகை, உலவாக்கிழி, அடைக்கப்
பாடல், பனை.தாளம், பாலைநெய்தல் — ஏடெதிர், வெப்பு
என்புக் குயிர்கொடுத்தல் ஈங்கிவைதாம் ஓங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்." (70)

இதில் சம்பந்தர் செய்த அற்புதச் செயல்கள் குறிக்கப்பட்டன. அவை, திருக்கொள்ளம்பூதூரில் ஓடம் தானே செல்லப் பாடியது, திருஅரத்துறையில் முத்துச் சிவிகை பெற்றது, திருவாவடுதுறையில் உலவாக்கிழி பெற்றது, திருமறைக்காட்டில் மறைக்கதவம் அடைத்தது, திருவோத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கியது, திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்றது, திருநனிபள்ளியில் பாலைநிலத்தை நெய்தல் நிலமாக்கியது, மதுரையில் வைகையாற்றில் ஏடு எதிரேறவிட்டது, பாண்டியனுக்குச் சுரநோய் தீர்த்தது, திருமயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணாக்கியது என்பனவாம்.

"கொல்களிற்றின் நீற்றறையில் நஞ்சிற் கொலைதவிர்தல்
கல்லே மிதப்பாக் கடல்நீந்தல் — நல்ல
மருவார் மறைக்காட்டில் வாசல்திறப் பித்தல்
திருவாமூ ராளி செயல்" (71)

என்னும் வெண்பாவில், அப்பர் அருஞ்செயல்கள் உள்ளன. அவை சமணர்கள் ஏவிய யானையாலும், வைத்த நீற்றறையாலும், ஊட்டிய நஞ்சினாலும் இறவாதிருந்தது, அவர்கள் கட்டி வீழ்த்திய கல்லே தெப்பமாக மிதக்கப்பெற்றுக் கடலைக் கடந்து கரையேறியது, திருமறைக்காட்டில் மறைக்கதவம் திறந்தது என்பனவாம்.

வண்தமிழ் தன்னால் சிவன் அஞ்செழுத்தை ஓதிக் கரையேறிய வரலாற்றைச் சேக்கிழார் திருவாக்கில் அழகுறக் காணலாம்.

" இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ "

இவ்விருவர் செயல்களையும் இவ்வாறு விரித்தோதிய உய்ய வந்த தேவநாயனார், வன்றொண்டரது செயல்களை, 'நான் என்னென்று சொல்வேன்' எனப் பரவசப்பட்டுக் கூறுகிறார்.

"மோகம் அறுத்திடில்நாம் முத்தி கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் - தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்றொண்டன் தொண்டுகளை
ஏதாகச் சொல்லுவேன் யான்" (72)

என்பது அவ்வெண்பா. 'மங்கையர் மோகம் முத்தி நெறிக்குத் தடை' என்று ஆகமங்களில் வெளியிட்டருளிய முதல்வனையே, மனைவியாரது ஊடலைத் தீர்க்கத் தூதாய் அனுப்பினர் வன்றொண்டர் என்றால், அவரது நிலைக்கு வேறு என்ன சான்று வேண்டும்!

"பாய்பரியோன் தந்த பரமானந்தப் பயனைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து - மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்" (73)

விடையேறும் வித்தகனாகிய சிவபிரானைக் குதிரைச் சேவகனாக வரச்செய்து, அப்பெருமான் ஞானாசிரியனாய் வந்து அருளிய பேரின்பப் பயன் முழுதும் தமது திருவாசகத்திலே ததும்புமாறு மாணிக்கம்போன்ற சொற்களாலாகிய அருட்பாடல்களைப் பாடி, உலகத்தை உய்வித்த மாணிக்கவாசகரது அற்புதச் செயல் இப்பாட்டில் குறிக்கப்பட்டது.

இங்ஙனம் திருஞானசம்பந்தர் முதலிய சமயாசாரியர்கள், பிறர் ஒருவராலும் செய்ய ஒண்ணாத அதியற்புதச் செயல்களைச் செய்தது, அவர்களது கருவி கரணங்கள், நமது கருவி கரணங்கள் போலப் பசுகரணங்களாய் இல்லாமல், சிவகரணங்களாயினமையாலேயாம் என்பது.

"பாலை நெய்தல் பாடியதும், பாம்பொழியப் பாடியதும்
காலனைஅன் றேவிக் கராங்கொண்ட - பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போல் அல்லாமை காண்" (12)

என்று முன்பே சொல்லப்பட்டது.

இன்னும் திருக்குறிப்புத்தொண்டர், கோட்புலியார், மூர்த்தியார், மூர்க்கர் முதலிய நாயன்மார்கள் எல்லாரும் உறுதியான அன்புச் செயல்களாலே உலக வாதனையை நீக்கிக்கொண்டமை, "கல்லிற் கமரிற் கதிர்வாளிற் சாணையினில்" என்னும் வெண்பாவில் (50) எடுத்துக்காட்டப்படுகிறது. அன்பிற்கு ஓர் எல்லை

யாய் உள்ள கண்ணப்ப நாயனரது அன்பின் பெருமையை "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" என்று மாணிக்கவாசகர் அருளியதை எடுத்துக்காட்டி, அக் கண்ணப்ப ரது அன்பின் பெருமையை அதனையுடைய கண்ணப்பர் அறிய லாம்; அவருக்கு அருள்செய்த காளத்தியப்பர் அறியலாம்; ஏனையோர் அறியக்கூடியது அன்று என விளக்குகின்றது.

கண்ணப்பர் போன்றவரே மங்கையர்க்கரசியார்; அவர் ஓர் அரசமாதேவியார். ஆனல் அவருக்கு இருந்த சிவபத்தியின் சிறப்பு எத்தகையது? 'சீகாழியில் ஞானசம்பந்தப் பிள்ளையார் தாம் தோன்றி இரண்டாண்டு நிரம்பி மூன்ருவது ஆண்டு தொடங்கப்பெறும்பொழுதே சிவபிரான் அம்பிகையோடும் எதிர் தோன்றிவந்து ஞானப்பால் கொடுப்பிக்கப் பெற்ருர்' என்று கேள்வியுற்ற மாத்திரத்திலே, அன்பின்மேலீட்டால் அவர் தனங்களில் பால்சுரக்கப்பெற்ருர். அது,

"சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையார் அன்பிருந்த வாறு"

என வியந்துரைக்கப்படுகின்றது. ஞானசம்பந்தர், சமணரை வென்று மதுரையில் இருந்தபொழுது, அவரைக் காணவந்த சிவபாதவிருதயரை, அவர், 'எனக்கு ஞானப்பால் கொடுத்தவர் (போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத் தாதை யார் முனிவுறத் தானெனை யாண்டவன்) கழுமல வளநகரில் எங்கள் அம்மையுடன் நலமோ' என்று வினவிய அருமையும் இங்கு நினைந்து இன்புறத்தக்கது.

இறைவனை, 'பேரறிவினன்; பேராற்றல் உடையவன்; பெரியோன்' என்றெல்லாம் சொல்வதால் அவனைப்பற்றிய அறிவு நமக்கு உண்டாகின்றது. ஆனல், அவனை, 'எல்லா உயிர்க்கும் அம்மையும் அப்பனுமாய் இருந்து எல்லா நலங்களை யும் செய்கின்ருன்' என்று கூறினல், அவனிடத்து அன்பு தோன்றுகின்றது. அதனல், திருக்களிற்றுப்படியார்,

"அம்மையப்ப ரேஉலகுக்கு அம்மையப்பர்"

என்று எடுத்துக்கொண்டு, அவ்வாறு அறிந்து அன்புசெய்பவ ருக்கு அவன் திருஞானசம்பந்தருக்கு வந்து அருள்செய்தது போல, அம்மையப்பனகவே வந்து அருள்செய்வன்' என்றும்

கூறிற்று. மேலும், 'அவன் எல்லா உலகுக்கும் அப்புறத்தில் உள்ளவனுயினும், உயிர்களின்பொருட்டு இவ்வுலகிலும்தோய்வற நிற்பன்' என்று கூறி, அவனை அங்ஙனம் அறிந்து அன்புசெய்த அடியார்களாகிய நாயன்மார்களது வரலாற்றினைப் பல இடங் களிலும் பற்பலவற்றிற்கும் எடுத்துக்காட்டிற்று.

சமயாசாரியர் முதலிய அருளாசிரியர்களது வரலாறுகளே யன்றி, அவர்களது திருமொழிகளும் ஆங்காங்கு இந்நூலில் பிரமாணங்களாக எடுத்துக்காட்டப்படுகின்றன. இவைகளால், சமயாசாரியர்கள் முதலிய நாயன்மார்களது அருள் வாழ்க்கை களும், அவர்களது அருள்வாக்குக்களுமே சித்தாந்த சாத்திரங் களாகிய இலக்கணத்திற்கு இலக்கியங்களாகும் என்பது வெள்ளிடைமலைபோல் விளங்கும். இவற்றிற்கிடையில் திருக் குறளைத் திருமுறைகளோடு ஒத்த பிரமாண நூலாக இந்நூல் எடுத்தோதி வருவது குறிப்பிடத்தக்கது. தமிழில் உள்ள ஏனைய வைதிக சமய சாத்திரங்களுள் ஒன்றும் திருக்குறளை அவ்வாறு குறிப்பிடவில்லை.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின் அஃது தொன்றுமே வேண்டுவது - வேண்டினது'
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால்"

என்ற வெண்பாவில் "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை' என்னும் குறட்கருத்து வந்துள்ளதை எடுத்துக்காட்டாகக் காண லாம்.

மற்றும் அத்துவித விளக்கம், தத்துவமசி முதலிய மகா வாக்கியங்களின் பொருள்கள் முதலியனவும் இச்சாத்திரத்துள் தெளிவாக்கப்பட்டுள்ளன. சைவ சித்தாந்தம் முடிவாகக்கொள் வது திருவைந்தெழுத்தாகிய பஞ்சாட்சரத்தையே. அதனையே அம்மையப்பரைக் காட்டும் மந்திரமாகத் திருக்களிற்றுப்படியார்,

" அஞ்செழுத்து மேஅம்மை யப்பர்தமைக் காட்டுதலால்
அஞ்செழுத்தை ஆருகப் பெற்றறிந்து"

எனக் கூறுகின்றது. 'நந்தி நாமமாகிய. 'நமச்சிவாய' என்னும் மந்திரத்தை ஓதுபவர்கட்கு, மந்தரம் அன பாவங்கள் மேவி யிருப்பினும் அவை சிந்தும்; செல்வமும் மல்கும் என்பது ஞானசம்பந்தரது அருள்வாக்கன்றே! மெய்கண்டாரும்,

"ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி எண்ணுமஞ் செழுத்தே"

என்றார்.

அம்மை யப்பரை அறிந்து அன்பு செய்து அவரது இன்பத்தை நுகர்தற்குரியதாகிய உயிர்க்கு, அதற்குத் தடையாய் நிற்பது அறியாமையால் உண்டாகும் மோகம். அதனை, திருவருளைப்பற்றி நின்று நீக்கினால், அம்மை யப்பரோடு ஒன்றுபடலாம் என்பதை,

"முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்த தருளென்னுங் - கத்தியினால்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம்பழுக்கும்
ஏகக் கொடிஎழுங்காண் இன்று" (93)

என முடிவாகக் கூறி, பின்பு முதல் நூலாசிரியர் கூறியது போலவே, ஆசிரியரை வாழ்த்தி முடிக்கின்றது. அவ்வாழ்த்தும் அம்மை யப்பர் வாழ்த்தாகவே அமைந்திருத்தல் அறிந்து மகிழ்தற்குரியது.

"சிந்தையிலும் என்றன் சிரத்தினிலும் சேரும்வகை
வந்தவனை மண்ணிடைநான் வாராமல் - தந்தவனை
மாதினுடன் எத்திறமும் வாழ்ந்திருக்க என்பதலால்
ஏதுசொலி வாழ்த்துவேன் இன்று" (100)

அம்மை யப்பரைக் காட்டுவதாகிய இந்நூலை உலகம் நன்முறையில் ஓதி உணர்ந்து, அம்மை யப்பர்பால் அன்பு செய்து அவரது அருளைப்பெற்று உய்வதாக.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.
திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

( மலர் 23, இதழ் 1, பக்கம் 34 இன் தொடர்ச்சி )

## சற்காரிய வாதம்

மாணாக்கன் : உலகம், பௌத்தர் கூறுவதுபோல உள்ளதும் இல்லதும் அல்லாத சூனியப்பொருளன்றாயும், சமணர் கூறுவதுபோல உள்ளதும் இல்லதுமாய சமுசயப்பொருளன்றாயும் ஒழியின், அதனை, மற்று எவ்வகைப் பொருள் என்பது ?

ஆசிரியர் : இஃது என்ன வினா ! உலகம் சூனியப் பொருளுமன்று ; சமுசயப் பொருளுமன்று என்றால், 'அஃது உள் பொருள்' என்பது, தானே கிடைக்கின்றது. 'உலகம் உள் பொருள்' என்பதுதான் சித்தாந்தம்.

மாணாக்கன் ; உலகத்தை, 'உள்பொருள்' என்று கூறி விட்டால், உள்ள பொருளை ஒருவன் படைக்க வேண்டுவது இல்லையே ; அதனால், 'உலகத்தைப் படைக்கின்ற ஒருவன் இருக்கின்றான்' என்பது பொருந்தாதாய் முடியுமாகலின், உலகத்தை, 'உள்பொருள்' என்பதும், சூனிய வாதம் அனேகாந்த வாதம் முதலியன போல, மீண்டும் நீரீச்சுர ( கடவுள் இல்லை என்கிற ) வாதத்தையே அன்றோ கொண்டுவரும் ?

ஆசிரியர் : அப்படி யன்று ; 'உள் பொருள்' என்றால், 'எல்லாப் பொருள்களும் ஒரு நிலையிலே உள்ளன' என்பது ஆகிவிடாது. ஒரு பொருளைக் குறித்து, 'உள்ளதா? இல்லதா?' என்று எழும் வினாவிற்கு, 'உள்ளது' என்று விடை கூறின், 'எவ்வாறு உள்ளது ?' என்ற வினா, அடுத்து நிகழ்ந்தே தீரும் அவ்வினாவிற்கு, இடம் நோக்கி ஏற்ற பெற்றியான் விடை கூறப் படும். 'உலகம் உள்ளதா ? இல்லதா ?' என ஐயுற்று வினவு வார்க்கு, பௌத்தர், 'உள்ளதும் அன்று; இல்லதும் அன்று;

சூனியம்' என விடை இறுக்கின்றனர். சமணர், 'உள்ளதுந் தான்; இல்லதுந்தான்' என்று சமுசயமாகக் கூறுகின்றனர். சைவசித்தாந்திகள், 'உலகம் உள்பொருளே' என வரையறுத்து உணர்த்துகின்றனர்.

சூனியமாகவும், சமுசயமாகவும் கூறுவோர் கூற்றில் ஐயம் தோன்றப்பெறுது, அவற்றை மெய்என உடம்பட்டவர்க்கு அவை பற்றி மேலே வினு எழுதற்கு இடம் இல்லை. ஆனுல், 'உள் பொருளே' என்பதனை உடம்பட்டவர்க்கு அஃது, 'எவ்வாறு உள்ளது?' என்னும் அவாய் நிலை எழவே செய்யும். அவ் வவாய் நிலை ஏற்றபெற்றியான் நிரப்பப்படும்.

அஃதாவது, 'உலகம் உள்ளது' என்ருல், 'அஃது எவ் வாறு எள்ளது?• என்றும் ஒருபடித்தாய் உள்ளதா? அன்றிக் கணந்தோறும் மாறுபடும் மாற்றங்களை உடையதாய் உள்ளதா? ஒன்ருய் உள்ளதா? பலவாய் உள்ளதா? அறிவாய் உள்ளதா? மடமையாய் உள்ளதா? நுண்ணிதாய் (சூக்குமமாய்) உள்ளதா? பரியதாய் (தூலமாய்) உள்ளதா' என்று இங்ஙனம் பலவாற் ருன் வினு நிகழும். அந்நிலையில், உலகத்தை உள்பொருளெனத் துணியமாட்டாது ஐயுறுவோர், 'உள்ளதாயின் தோன்ற வேண்டுவது என்னை?' என்ருே, அல்லது 'உலகம் உள்ளதா யின், அதனை ஒருவன் படைத்தான் என்பது எவ்வாறு கூடும்?' என்ருே வினவுவராயின், அவரது வினு, 'உலகம் உள்ளது' என்று கூறுவதற்கு 'அஃது என்றும் ஒருபடித்தாய் உள்ளது' எனப் பொருள்கொண்டு வினுவுவதாகும் என்பது வெளிப்படை.

உலகத்தை, 'உள்ளது' என்று கூறிய அளவில், அதற்கு 'என்றும் இவ்வாறே உள்ளது' என்பது எப்படிப் பொருளாகும்? 'உள்ளது' என்பதற்கு, 'என்றும் உள்ளது' என்பதுதான் பொருள்; ஆயினும், 'என்றும் இப்படியே உள்ளது' என்பது பொருளாகாது. அதனுல், 'உலகம் உள்ளது' என்று உணர்த் திய பின், 'எவ்வாறு உள்ளது?' எனக் கேட்டுணர்தல் வேண்டும். அஃதாவது, 'இன்று உள்ளது போலவே என்றும் உள்ளதோ? அல்லது முன்பு ஒரு நிலையில் இருந்து, பின்பு இந் நிலையை அடைந்து, இனியும் வேருெரு நிலையை அடையும் தன்மையில் உள்ளதோ' என வினுவி யறிதல் வேண்டும். அங்ஙனம் வினுவினுல், 'உலகம் என்றும் ஒருபடித்தாய் உள்ளது அன்று; எப்பொழுதும் நிலைமாற்றத்தினை அடைவதாய் உள் ளதே; அம்மாற்றங்கள் அனைத்தும் 'தோற்றம், நிலை அல்லது

வளர்ச்சியும் தேய்வும், ஒடுக்கம்' என்னும் மூன்று நிலைகளுள் அடங்கும்' என்பதே சைவ சித்தாந்திகள் கூறும் விடை.

இதனால், காணப்பட்ட உலகம், இதற்குமுன் ஒடுங்கிய நிலையில், காணப்படாத நுண் (சூக்கும) நிலையில் இருந்து, பின். காணப்படும் பரு (தூல) நிலையை அடைந்துள்ளது; இனி. முன்போலவே ஒடுங்கி நுண்ணிலையை அடையும் என்பதும், அஃது எவ்வாறாயினும், 'உலகம் என்றும், யாதேனும் ஒரு நிலையில் உள்ளதே யன்றி இல்லாது ஒழிவதில்லை' என்பதும் புலனாகும்.

ஆகவே, காணப்படாத நுண்ணிலையில் இருந்த உலகம் காணப்படும் இப் பருநிலையை அடைந்தாலல்லது அதனாற் பயன் இல்லாமையின், நுண்ணிலையில் உள்ளதாகிய உலகம் பருநிலையில் தோன்ற வேண்டுவது இன்றியமையாததாயிற்று. இனி, அங்ஙனம் நுண்ணிலையில் இருந்த உலகத்தை இப் பருநிலையிற் கொணர்ந்தவன் இறைவனாதலின், 'இவ்வுலகத்தைப் படைத்தவன் ஒருவன் உளன்' என்பதும் பொருந்துவதாயிற்று. உண்மை இதுவாகலின். 'உலகம் உள்ளது' என்றபொழுது, 'உலகம் உள்ளதாயின் தோன்ற வேண்டுவது எற்றுக்கு?' எனவும், 'உள்ளதாயிள் தோன்ற வேண்டாமையின், உலகத்தை உள்பொருள் என்பார்க்கு, அதனைப்படைத்தவன் ஒருவன் உண்டு என்று கூறுவது பொருந்தாதாம்' எனவும் தடை நிகழ்த்தி. 'உலகம் உள்பொருள்' என்பதனை மறுத்துவிட்டதாகத் தமக்குள் மகிழ்ந்து கொள்ளும் மகிழ்ச்சி, நுண்ணறிவுடையோரிடத்துத் தோன்றாது என்க.

இதனானே, 'தோற்றம்' என்பது, 'காணப்படாத நுண்ணிலையின் நீங்கிக் காணப்படும் பருநிலையை அடைவதே' என்பதும், 'நிலை' என்பது, 'காணப்படும் நிலையிலே இருத்தல்' என்பதும், 'அழிவு' என்பது, 'காணப்பட்ட பருநிலையின் நீங்கி முன்போலக் காணப்படாத நுண்ணிலையை அடைதலே' என்பதும். இவ்வாறன்றி, 'தோற்றம்' என்பது முன்பு எங்கும் எந்நிலையிலும் இல்லாத பொருள் தோன்றுதலும், 'அழிவு' என்பது. உள்ள பொருள், பின்பு எங்கும் எந்நிலையிலும் இல்லாது அறவே நசித்தொழிதலும் அல்ல என்பதும் விளங்கும்.

'இல்லது தோன்றாது; உள்ளது அழியாது' என்பது சைவ சித்தாந்தத்தின் அடிநிலைப் பேருண்மைகளில் ஒன்று என்பதை முன்னேயும் குறிப்பிட்டோம். ஆகவே, உலகத்தைச் 'சூனியம்.

என்றோ, 'சமுசயப் பொருள்' என்றோ கூறுதல் கூடாது. 'உலகம் உள்பொருள்' என்பதே உண்மை என்பதையும், அங்ஙனம் கூறுதல் நிரீச்சுரவாதத்தைக் கொண்டு வாராது சேச்சுர (கடவுள் உண்டு) வாதத்தையே நிறுவும் என்பதையும் நன்குணர்ந்துகொள்க.

மாணுக்கன்: தோன்றுகின்ற பொருள்கள் யாவும் தோற்றத்திற்கு முன்னும் நுண்ணிலையில் உள்ளன என்பது உண்மையாயின்றோ, 'தோற்றம்' என்பதற்கு, 'நுண்ணிலையின் நீங்கிப் பருநிலையை அடைதல்' என்பது பொருளாகும்? அஃது உண்மையாதல் எவ்வாறு?

அஃதாவது குடம் தோன்றிய பின்னர்க் காணப்படுகின்றது; அதற்குமுன் அது காணப்படவில்லை. ஆகவே, 'தோற்றத்திற்கு முன்பும் அது நுண்ணிய நிலையில் உள்ளது' என்பதற்குச் சான்று யாது?

ஆசிரியர்: குடம் தோன்றிய பின்னர்ப் பருநிலையை அடைந்தமையால், அதன் உண்மை, காட்சி யளவை பற்றித் துணியப்படுகின்றது. தோன்றுத முன், அது நுண்ணிலையில் இருத்தலால், அதன் உண்மை, காட்சியளவையால் துணியப் படாது; கருதலளவையால் துணியப்படும்.

மாணுக்கன்: அஃது எவ்வாறு?

ஆசிரியர்: புகையைக் கண்டவிடத்து, அதனை ஏதுவாகக் கொண்டு, 'இங்கு நெருப்பு உண்டு' என்று துணிவது போல, காணப்பட்ட பொருளை ஏதுவாகக் கொண்டு காணப்படாத பொருளைத் துணிவதுதானே கருதலளவை?

மாணுக்கன்: ஆம்; அதனை முன்பே உணர்த்தியிருக்கிறீர்கள்.

ஆசிரியர்: பசுக்கன்றின் தலையிலும் முயற்குட்டியின் தலையிலும், பிறந்த பொழுது கொம்பு இல்லை. ஆயினும், பசுக்கன்றின் தலையில் சிலநாட்களுக்குப்பின் கொம்பு தோன்றுகிறது; முயற்குட்டியின் தலையில் என்றுமே கொம்பு தோன்றுவது இல்லை. இவ்விரண்டிற்கும் நீ என்ன காரணம் கூறுகின்றாய்? பசுக்கன்றின் தலையில் கொம்பு காணப்படாது நுண்ணிலையில் இருந்ததும், முயற்குட்டியின் தலையில் கொம்பு எவ்வாற்றானும் இல்லாமையுந்தானே காரணம்?

மாணுக்கன் : 'பசுக் கன்றின் தலையில் முதலில் கொம்பு எவ்வாற்ருனும் இல்லை ; கொம்பு உண்டாகக் கூடிய ஒரு தன்மை அல்லது ஆற்றல் (சத்தி) இருந்தது' என்றும், 'அதுவே பின் கொம்பைத் தோற்றுவித்தது' என்றும் கொண்டால் என்னை ?

ஆசிரியர் : நீ கூறும் தன்மை அல்லது சத்தி, கொம்பிற்கு வேருனது என்பதற்குச் சான்று யாது ? கொம்பு தோன்றும் இடத்தில், 'அதனைத்தோற்றுவிக்கும் ஆற்றல்உள்ளது' என்றும், 'தோன்ருத இடத்தில் 'அவ்வாற்றல் இல்லை' என்றும் கூற வேண்டியிருப்பதால், கொம்பினது தன்மையே அவ்வாற்றலாவ தன்றி, அதற்கு வேருகாமை நன்கு விளங்கும். அந்த ஆற்றலையே நாம், 'கொம்பினது நுண்ணிலை' என்று கூறினேம். அதனுல், அஃது எமது கொள்கையேயாகின்றது.

அன்றியும், 'பசுக் கன்றின் தலையில் முதலில் ஆற்றல் வடிவாய் இருந்த கொம்புதானே பின்பு பொருள் வடிவாய்த் தோன்றும்' எனக் கொள்வது எளிதாய் இருக்க அதனை விடுத்து, வேருேர் ஆற்றல் அதன் தலையில் இருந்து கொம்பைத் தோற்றுவிக்கும் எனின் அவ்வாற்றல் அங்கிருந்து அதனைத் தோற்றுவித்தற்கு இயைபு காட்டுதல் அரிதாகும்.

அங்ஙனம் காட்டினும் அவ்வாற்றல் வேருயின், பசுக்கன்றின் தலையில் இருந்து கொம்பைத் தோற்றுவிக்கின்ற ஆற்றலும், யானைக் கன்றின் வாயிலிருந்து தந்தத்தைத் தோற்றுவிக்கின்ற ஆற்றலும் அவற்றையே தோற்றுவிப்பதன்றி மாறித் தோற்றுவியாமைக்குக் காரணம் என்னை என்ற வினு எழும். அதற்கு, ஆங்காங்கு அவ்வப் பொருளுக்குரிய தன்மை யுண்மையே அதற்குக் காரணம் என விடை கூறின், அது நாம் மேற்கூறிய நுண்ணிலையாகவே முடியும். அதனுல், சத்தியை வேருகக் கொள்ளின், 'மிகை' என்னுங் குற்றமுமாகும். ஆகவே, 'தோற்றமுடைய பொருள்கள் யாவும், முன்பு உள்ளனவாய் இருந்தே பின் தோன்றும்' என்பது, இல்லது தோன்ருமையாகிய எதிர் மறையின் வைத்து அறியப்படுவதாகும். அங்ஙனம் அறியுமாறு காட்டுவாம்.

'தோற்றமுடைய பொருள்கள் யாவும் அத்தோற்றத்திற்கு முன்னும் உள்ளனவே ; இல்லது தோன்ருதாகலின் ; எது இல்லது, அஃது எக்காலத்தும் தோன்றுதல் இல்லை ; முயற் கொம்பு போல'

'தோற்றமுடைய பொருள்கள் யாவும் அத்தோற்றத்திற்கு முன்னும் உள்ளன' என்பது, இங்ஙனம் வரும் கருதலளவையால் விளங்குதல் காண்க,

தோன்றிய பொருள் காரியமும், அதற்கு முதலாய் உள்ளது காரணமும் ஆகலின், 'காரியங்கள் பலவும், தோற்றத்திற்கு முன்னும் தத்தங் காரணங்களில் உள்ளனவே' எனக் கூறுவது, 'சற்காரிய வாதம்' எனப்படும். சத் - உள்ளது. சற்காரியம் - உள்ளதாகிய காரியம், இல்லது தோன்றும் என்பவர், அசற் காரிய வாதிகளாவர்.

'இல்லாமல் பிறவாது', 'சட்டியில் இருந்தால் அன்றே அகப்பையில் வரும்' என்பன போன்ற பழமொழிகள் பலவும் சற்காரிய வாதத்தையே விளக்குவனவாகும். இச் சற்காரிய முறை இல்லையாயின், மண்ணிலிருந்து ஆடையும், நூலிலிருந்து குடமும், நெல்லிலிருந்து கமுகும் தோன்றாது, மண் முதலியவற்றி லிருந்து முறையே குடமும், ஆடையும், நெல்லுமே தோன்று கின்ற வரையறை இல்லாதொழியும்.

நிலத்தை அகழ்ந்தால் சிலவிடத்தில் நீர் தோன்றுகின்றது; சிலவிடத்தில் பாறை தோன்றுகின்றது; சிலவிடத்தில் பொன் பொருள் முதலியன தோன்றுகின்றன. இவற்றுக்குக் காரணம் அதுவது அங்கங்கு இருப்பதேயாகும். அதனால், 'உள்ளதே தோன்றும்' என்னும் சற்காரிய வாதம் எளிதில் உடன்படக் கூடியதே யன்றோ?

மாணாக்கன்: நிலத்தினுள் நீர் முதலியன உள்ளன என்பது எளிதில் விளங்குகின்றது; ஆயினும், 'மண்ணிற் குடம் உள்ளது; நூலில் ஆடை உள்ளது' என்றல் போல்வன எளிதில் விளங்கு வனவாய் இல்லை; அதனால்தான் ஐயம் உண்டாகின்றது.

ஆசிரியர்: நிலத்தினுள் நீர் முதலியன பருநிலையிலே உள்ளன; அதனால் அவற்றது உண்மை எளிதில் விளங்கு கின்றன. ஆனால், மண் முதலியவற்றில் குடம் முதலியன நுண்ணிலையில் இருத்தலால் அவற்றது உண்மையை அரிதில் தான் உணரவேண்டும்.

பௌத்தர், சமணர், தார்க்கிகர் முதலியோர் பேசும் முறை யிலே நின்று தமது சற்காரிய வாதத்தை வலியுறுத்தற் பொருட்டு, 'மண்ணிற் குடம் உண்டு; நூலில் ஆடை உண்டு' என்றாற் போலச் சித்தாந்திகள் பேசினாலும் 'மண்ணில் குடம் ஆம்

தன்மை உண்டு; நூலில் ஆடை ஆம் தன்மை உண்டு' என்றற் போல்வனவே அவர்களது கருத்தாகும். இன்னும் தெளிவாகக் கூறினுல், 'குடமாய்த் தோன்றிய பொருள், மண்ணாய் இருந்தே தோன்றியது; ஆடையாய்த் தோன்றிய பொருள், முன்பு நூலாய் இருந்தே தோன்றியது' என்பனவே கருத்து என்று கூறலாம். முடிவாக, சூனியத்திலிருந்தோ, மற்றும் உண்மைக்கு வேருனவற்றிலிருந்தோ எந்தப் பொருளும் தோன்றுவதில்லை. உள்ள பொருளே நிலைமாறியும், வடிவு மாறியும் வரும் என்றே கொள்ளல்வேண்டும். இச் சற்காரிய வாதம் சைவ சித்தாந்தத் திற்கு அடி நிலையானது. அதனுல், 'மருவு சற்காரியத்தாய்' என்று, உமாபதி சிவாசாரியர் தமது சிவப்பிரகாச நூலுட் கூறி யருளினர். இச் சற்காரிய வாதம் தவிர, அசற்காரிய வாதம்; சூனிய வாதம், சமுசய வாதம் முதலிய யாவும் உண்மை யுணராது தடுமாறிக் கூறும் குழறுபடை வாதங்களாதல் அறிக,

மாணுக்கன்: நன்ருக அருளிச் செய்தீர்கள்! 'இல்லது தோன்ருது! என்பதனைப் பௌத்தர் சமணர் முதலியோரும் உடன் படுகின்றனர்; ஆயினும், 'உள்ளதாயின் தோன்றவேண் டுவது என்னை? என்னும் தடையை இங்ஙனம் தெளிவாக விடுக்க மாட்டாமையால், அவர்கள் ஏதேதோ சொல்லிக் குழப்புகின்ருர் கள். 'தோன்றிய பொருள் தோற்றத்திற்கு முன்னும் உள்ளது' என்பதற்குப் பொருள், 'காணப்படாத நுண்ணிலையில் உள்ளது என்பதே' என விளக்குதலால், 'மண்ணிற் குடம் உள்ள தாயின் காணப்பட வேண்டும்' என்னும் முரட்டு வாதத்திற்கும் இடம் இல்லா தொழிகின்றது. அதனுல், இச் சற்காரிய வாதத் தின் உண்மையை அடியேன் இப்பொழுது நன்குணர்கின்றேன். ஆதலின், உலகத்தை, 'உள்பொருள்' என்றே இனித் தியங்காது கொள்வேன்.

(தொடரும்)

---

மதிப்புரை

## திருக்கேதீச்சரத் தல மகிமை

ஆசிரியர்: பண்டிதர் திரு. த. சுப்பிரமணியம், தமிழாசிரியர், இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை; யாழ்ப்பாணம். பக். 24, விலை 30 சதம். பண்டிதரவர்கள் சைவ இளைஞர்சங்க வெளியீடாக வெளியிட்டுள்ள இச்சிறுநூலில் திருக்கேதீச்சரத் தலச் சிறப்பை எளிய நடையில் விளக்கியுள்ளார். தாமியற்றிய தோத்திரப்பாடல் கள் சிலவற்றையும் இணைத்துள்ளார். தேவாரப் பதிகங்களும் உள்ளன. திருப்பணி வேண்டுகோளாக உள்ள இவ் வெளி யீட்டை ஆசிரியர்க்கு எழுதிப்பெறலாம். — "வேலன்"

# சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 23, இதழ் 1, பக்கம் 41 இன் தொடர்ச்சி)

दुकूलमुत्तमं प्रोक्तं वृक्षसूत्रं तु मध्यमम् ।
अथवा तन्तुकार्यं च त्रिविधा योगपट्टिका ॥ 259

त्र्यंगुलंतु विस्तारं यन्मानमुपवीतकम् ।
योगपट्टी विधीर्ह्येवं भस्मालय मथोच्यते ॥ 260

பட்டினால் நெய்யப்பட்ட யோகபட்டிகையானது உத்தமம். மரையுரியினால் செய்யப்பட்ட யோகபட்டிகையானது நடுத்தரம். நூலினால் செய்யப்பட்ட யோகபட்டிகையானது அதமம். இதனுடைய அகலத்தின் அளவு மூன்று அங்குலமுள்ளதாகவும், யக்ஞோபவீதத்திற்குச் சமமான சுற்றளவு உள்ளதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு யோகபட்டிகைவிதி கூறி விபூதிப்பையின் இலக்கணம் கூறப்படுகிறது.

दशांगुल समं दैर्घ्यं पञ्चाङ्गुलं सुविस्तृतम् ।
दुकूलद्वय संयुक्तं गोळकाकृतिवत्कृतम् ॥ 261

सितभस्म समायुक्त माचार्याय प्रदापयेत् ।
भस्माधारविधिः प्रोक्ता पञ्चाङ्गभूषणं श्रुणु ॥ 262

விபூதிப்பையானது பத்து அங்குல நீளமுள்ளதாயும், ஐந்து அங்குல விஸ்தாரமுள்ளதாயும், இரண்டு பட்டுகளால் தைக்கப் பட்டதாயுமிருக்கவேண்டும். வெண்மையான விபூதியை அந்த சஞ்சிகையில் நிரப்பி ஆசாரியனின் பொருட்டுக் கொடுக்க வேண்டும்.

हेमाङ्गुळीयं कटकं कटिसूत्रं च कुण्डलम् ।
हेमयज्ञोपवीतं च पञ्चांगभूषणं स्मृतम् ॥ 263

पवित्रं पञ्चनिष्कं स्यात्कटकं द्वादशं भवेत् ।
निष्काष्टकटिसूत्रं च कुण्डलं दशनिष्ककम् ॥ 264

हेमयज्ञोपवीतं च पञ्चनिष्कं प्रकीर्त्तितम् ।
इत्येवं विधिवत्कृत्वा पश्चादावाहयेच्छिवम् ॥ 265

பவுன் மோதிரம், பவுன் தோடா, தங்க அறைநாண், தங்கத்தினல் செய்யப்பட்ட குண்டலம், பவுன் பூணல் என இவ்வைந்தும் பஞ்ச அங்க பூஷணங்கள் ஆம். ஐந்து விராகனிடையில் பவித்ரத்தையும், பன்னிரண்டு விராகனிடையில் தோடாவையும், எட்டு விராகனிடையுள்ளதாக கடிசூத்ரத்தையும், பத்து விராகனிடையுள்ள குண்டலத்தையும் செய்யவேண்டும். இவ்வாறு பஞ்சாங்க பூஷிதனுய் ஆசாரியன் இருந்துகொண்டு, சிவனை ஆவாஹனம் செய்யவேண்டும்.

दिवारात्रं स्थिरंलग्नं विनालिङ्गाच्चदैवतम् ।
आदाय कुम्भे संभोज्य रात्रौ यजनहोमके ॥ 266

सायं प्रातः क्रमेणैव कुर्याद्देशिक सत्तमः ।
गर्भगृहं ततो गत्वा स्थण्डिलं चतुरश्रकम् ॥ 267

இலிங்கத்திலிருந்து கும்பத்திற்கோ அல்லது பிம்பத்திற்கோ ஆவாஹனம் செய்வதானது இரவாயினும் பகலாயினும் ஸ்திர லக்னமான ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் நீக்கி மற்றைய சர உபய லக்னங்களில் ஆகர்ஷணம் செய்யவேண்டும். ஆவாஹனம் பகலில் செய்தாலும் ஹோமாரம்பம் பூஜை இரவு முதல் தான் ஆரம்பிக்கவேண்டும். இரவு பகல் என்ற முறைப்படியே ஹோமம் பூஜை முதலிய காலங்களைக் கணக்கிட்டுச் செய்ய வேண்டும். ஆவாஹனம் செய்யும் முன்பு கர்ப்பக்கிரஹத்தில் சுவாமியின் முன்பு சதுரச்ரமாக ஸ்தண்டிலம் போடவேண்டும். (சதுரச்ரம் ஸ்தண்டிலம் என்பது நெல், அரிசி, நவதான்யம் இவைகளால் நாற்கோணமாக அமைக்கப்பட்ட அமைப்பு.)

मध्येतु शिव कुम्भं स्याद्वर्धनीं तस्यवामके ।
अष्टकुम्भान्समादाय परितोस्थापयेत्क्रमात् ॥ 268

सकलीकरणं कृत्वा संकल्प्य विधिना ततः ।
पुण्याहंवाचयित्वाऽथ दर्भैः पुष्पैः परिस्तरेत् ॥ 269

அவ்வாறு அமைக்கப்பட்ட ஸ்தண்டிலத்தின் நடுவில் சிவ கும்பத்தையும், அதனுடைய இடது பக்கத்தில் வர்த்தனி கலசத்தையும், அதைச் சுற்றிலும் எட்டு வித்யேச்வர கும்பங்களையும் வைக்கவேண்டும். பிறகு, ஆசாரியன் சகளீகரணம் செய்து கொண்டு சங்கல்பத்துடன் புண்யாகவசனம் செய்து அந்த தீர்த்தத்தினல் புரோக்ஷித்து தர்ப்பங்களாலும் புஷ்பங்களாலும் பரிஸ்தரணம் போடவேண்டும். (சகளீகரணம் என்பது கரங்களிலும் ஹ்ருதயம் முதலிய அங்கங்களிலும் மந்திரங்களை நியாசம் செய்து சிவஸ்வரூபமாக பாவித்தல்.)

लंबकूर्चंतु संग्राह्य लिङ्गस्योपरि विन्यसेत् ।
आसनावरणादीनि कल्पयेत्पूर्ववत्क्रमात् ॥ 270

லம்பகூர்ச்சத்தை எடுத்து இலிங்கத்தின் சிரசில் சாத்திப் பஞ்சாஸனம் கல்பித்து நியாசம் செய்து வித்யாதேஹத்துடன் நேத்ர நியாசம் செய்து ஆவாஹனம் முதலிய உபசாரத்துடன் பஞ்சாவரணபூஜை செய்யவேண்டும். பஞ்சாஸனம் என்பது ஆதாரசக்திக்குமேல் அனந்தாசனம் சிங்காசனம் யோகாசனம், விமலாசனம் என்று ஐந்து ஆசனத்தின்மேல் குடிசக்தியை தியானித்தல், பஞ்சாஸன பஞ்சாவரணபூஜை என்று பெயர்.

नालिकेरं च तांबूलं दापयेद्धूपदीपकम् ।
कुम्भेचलासनं कल्प्य शक्त्यन्तमर्चयेत्क्रमात् ॥ 271

आसनं मूर्त्तिकंन्यस्यं दर्भनाडी प्रकल्पयेत् ।
नैवेद्य धूपदीपौ च कृत्वा न्यासं समाचरेत् ॥ 272

முறைப்படி சக்தியாதி சக்திபூஜை முதலியவற்றைச் செய்து முடித்துத் தூபதீபத்துடன் தேங்காய் பழம் தாம்பூலம் நிவேதனம் செய்து தர்ப்பைக்கயிற்றினல் நாடீ சந்தானம் செய்து கும்பத்தில் சலாசன பூஜை செய்து நியாசம் செய்யவேண்டும்.

अध्वषट्कं च विन्यस्य अष्टत्रिंशत्कलांन्यसेत् ।
विद्यादेहं समाकल्प्य घटे नेत्रं प्रकल्पयेत् ॥ 273

ஆறு அத்வாக்களை நியாசம் செய்து அஷ்டத்ரிசத் கலா நியாசமும் செய்து 'வித்யாதேஹ கல்ப்பனையுடன் கும்பத்தில் நேத்ர நியாசனம் செய்யவேண்டும்.' கலை, தத்வம், வர்ணம், புவனம், பதம், மந்திரம் என்பது ஆறு அத்வா மந்திரங்கள்.

அதாவது கலா மந்திரம் ஐந்து. தத்துவ மந்திரம், முப்பத்து ஆறு, வர்ணமந்திரம் ஐப்பத்துஒன்று, புவனமந்திரம் இருநூற்று இருபத்துநான்கு, பத மந்திரம் எண்பத்து ஒன்று. மந்திரம் பதினொன்று. இவைகள் ஒவ்வொன்றும் இறைவனுக்கு அவயவங்களாக விளங்குகின்றன. அதாவது கலை ஐந்தும். சிரசு முகம் மார்பு நாபி, கால் என்ற அங்கங்களாகும் தத்துவ மந்திரம் முப்பத்து ஆறும், எலும்பு என்ற தாதுவாகும் வர்ண மந்திரம் ஐம்பத்து ஒன்றும் த்வக் (தோல்) என்ற தாதுவாகும் புவன மந்திரம் இருநூற்றுஇருபத்து நான்கும், கல்பிதமான இறைவனின் சரீரத்தில் உரோமமாகும் பத மந்திரம் எண்பத்து ஒன்றும், மாமிச தாதுவாகும் மந்திரம் பதினொன்றும், குருதியாகும் இது போல் அஷ்டத்ரிசத்ரிசத்கலா நியாசங்கள் இறைவனின் திருவுருவத்திற்கு சாங்க உபாங்க ப்ரத்யங்கங்களாக விளங்குகின்றன, இவ்வாறு பாவனையுடன் நியாசம் செய்து கரசரணாத்யவயவங்களுடன் கூடினவராக நினைத்து வித்யா தேஹத்தைக்கல்பித்து நேத்திர மந்திரத்தையும் நியசிக்கவேண்டும், இவ்வாறு சர்வாவயவ பூரணனாக எண்ணி "लिङ्गबुद्धिं परित्यजेत्" என்றபடி இலிங்கம் என்ற ஞாபகத்தைவிட்டு இறைவனின் சரீரம் என்ற எண்ணம் கொள்ள வேண்டும்.

गुरूपदिष्ट मार्गेण मंत्रमुच्चारयेच्छनैः ।
सर्वाभरण संयुक्तं हृदयादि समन्वितम् ॥ 274

लिङ्गस्थं देव मावाह्य कुम्भे संयोजयेत्क्रमात् ।
तांबूलं कदलीं दद्यात् पाद्यादीन्धूपदीपकौ ॥ 275

குருவின் உபதேசமுறைப்படி ப்ராஸாத மந்திரத்தை உச்சரித்து சாவதானமாக சர்வாபரண பூஷிதராய், ஹ்ருதயம் முதலிய அவயவங்களால் நிறைந்தவராய் எண்ணி இலிங்கத்தினின்றும் கும்பத்தில் சேர்க்கவேண்டும். உடனே பழம் தாம்பூலத்துடன் பாத்யம் அர்க்கியம் ஆசமனம் கொடுத்து தூபதீப உபசாரம் செய்யவேண்டும்.

(தொடரும்)

# திருக்கோயில் அமைப்பு முறை

திரு. ம. வெ. மு. நாகராஜக் குருக்கள்

( மலர் 23, இதழ் 1, பக்கம் 61 இன் தொடர்ச்சி )

## 3. தேஹலப்தாங்குலம் :

சிற்பங்களை அமைப்பதற்காக "தேஹலப்தாங்குலம்" என்னும் அளவு முறை கூறப்படுகிறது.

க்ருஹீதப் ரதிமா யாமர் தத்தாலாங் குலிசங்க் யயா ॥
யல்லப் தோத்ஸே தமானந்து சதுர் விம்சத் சதம் குரு ॥
பஜேத் தேஷ் வேகபாகந்து தேஹலப் தாங்குலம் ச்மிருதம் ॥

( காரணுகமம் )

அமைக்க இருக்கின்ற பிரதிமையின் அளவைத் தாலாங்குலம் என்ற எண்ணிக்கையினுல் பகுத்து எடுத்துக்கொள்ளவேண்டும். எடுத்துக்கொண்ட விக்கிரகத்தின் உயர அளவை நூற்றிருபத்து நான்காகப் பகுத்துக்கொள்க. பகுத்த நூற்றிருபத்துநான்கில் ஒரு பகுதி தேஹலப்தாங்குலம் என்று கருதப்படுகிறது.

சிற்பங்களை உருவாக்குவதற்குத் தேஹலப்தாங்குலம் என்ற அளவு முறை கூறப்பட்டுள்ளது. ஆகமங்களில் பிரதிமாலக்ஷண விதி என்ற பகுதியில் சிற்பங்களை அமைக்கும்போது "தால" என்ற அங்க அளவுகள் கூறப்படுகின்றன. பிரதிமையின் அங்க அவயவங்கள் கூடுதல், குறைதல் முதலிய குற்றங்கள் நேராமலிருக்கவும், எடுத்துக்கொண்ட சிற்பத்தின் உருவத் தோற்றம் முழுமை பெற்று விளங்கவும் "தால" அளவுகள் குறிக்கப்படுகின்றன. பிரதிமையின் தேக உயரம் இவ்வளவு இருந்தால் உடலின் சுற்றளவு இத்தனைதான் இருக்கவேண்டும்; முகம், தோள், மார்பு, கை கால்கள், விரல்கள், நகங்கள் முதலிய அங்கமெல்லாம் இவ்வளவு அளவில்தான் இருத்தல் வேண்டும் என்றமான விதி (அளவு முறை) தாலமாத்திரமாகக் கூறப்பட்டுள்ளது. தெய்வவடிவங்களுக்குரிய அளவு முறைகள் வேறு. மற்றவடிவங்களுக்குரிய அளவு முறைகள் வேறு.

குழந்தை, சிறுவன், வாலிபன், கிழவன் ஆகிய பருவத் தோற்றங்களையும் பொதுவான ஓர் அளவில் பிரதிமைகளாக உருவகப்படுத்தவும் தேஹலப்தாங்குலத்தைச் சார்ந்த தால வகைகள் ஏற்பட்டிருக்கின்றன. காரணாகமத்தில் இன்ன இன்ன பிரதிமைகளை இன்ன இன்ன தாலத்தில் அமைக்கவேண்டும் என்ற விதிகள் கூறப்பட்டுள்ளன. 1 தசதாலம். 2 நவதாலம். 3 வசுதாலம். 4 ரிஷிதாலம். 5 ரசதாலம். 6 சரதாலம். 7 யுகதாலம். 8 திரிதாலம். இவ்வாறு தால வரிசை சொல்லப் படுகிறது. இவைகளும் உத்தமம், மத்திமம், அதமம் என மூன்று வகைப்படும். உதாரணமாக முதலில் குறிப்பிட்ட தசதாலம் என்பது உத்தம தசதாலம், மத்திம தசதாலம், அதம தசதாலம் என்று தசதாலம் என்பது மூவகைப்படும்.

இவ்வாறே நவதாலம், வசுதாலம் முதலியனவும் மூவகைப் படும். மகேஸ்வரமூர்த்தங்களையும், பிர்மா, விஷ்ணு ஆகிய திரு வுருவங்களையும் உத்தம தசதாலத்தை மேற்கொண்டு பிரதிமை களாகச் செய்யவேண்டும். உமாதேவி, சரசுவதி, துர்க்கை, சப்தமாதா, உஷாதேவி, பூமிதேவி, ஜேஷ்டாதேவி, மகா லக்ஷ்மி, சுப்பிரமணியர் ஆகிய விக்கிரகங்களை மத்திம தசதாலத் தால் உருவாக்கவேண்டும். சூரியன், சந்திரன், அஷ்டதிக்பால கர்கள், பைரவர் முதலிய மூர்த்திகளை அதம தசதாலத்தால் கற்பிக்கவேண்டும்.

இவ்வாறு இன்னும் பற்பல தெய்வத் திருவுருவங்களையும் மற்ற வடிவங்களையும் பிரதிமைகளாகப் படைப்பதற்குரிய தாலக் கணக்குகளை ஆகமங்களிலும் சிற்ப சாஸ்திரங்களிலும் பரக்கக் காணலாம். சிற்பங்கள் சாஸ்திர விதிப்படியும், கவர்ச்சிகரமாக வும் விளங்குவதற்கு 1 மானம். 2 பிரமாணம். 3 உன்மானம் 4 உபமானம். 5 பரிமாணம். 6 லம்பமானம் ஆகிய ஆறு (மான) அளவுக் குறிகளையும் மேற்கொள்ளவேண்டும். இந்த ஆறுவகை அளவுக் குறிப்பும் சரிவர அமையப்பெறாத விக்கிரகங் களில் தெய்வசாந்நித்தியம் இருப்பது அரிது. பிரதிமைகளை உருவாக்கும்போது இந்த ஆறுவகை மானங்களையும் குறைதல், கூடுதல் இன்றி ஒத்த அளவில் உருவாக்கவேண்டுவது அவசியம். மானம் முதலிய ஆறு அளவும் ஒத்தபடி அமையாமல் அளவுக் குறைவுடனோ அல்லது அதிக அளவுடனோ அமைக்கப்படும் தெய்வ வடிவங்களை உருவாக்கிய சிற்பிகளும், வழிபாடு செய்யும் தேசிகர்களும் விதிவழி தவறிய காரணத்தால் பெருநோய், பகை, வளர்ச்சி, பொருட்குறைவு, பொருள்சேதம், வறுமை

ஆகிய பலவித துயரங்களை அனுபவிப்பார்கள் என்று காரணாக மத்தில் பிரதிமாலக்ஷணாவிதி படலத்தில் அறுபத்துநான்காவது சுலோகம் முதல் எழுபதாவது சுலோகம் வரை சொல்லப்பட்டுள்ளது.

சர்வ லக்ஷண யுக்தஞ்சேத் சர்வ சித்திப் பிரதாயகம் ||

பிரதிமை அல்லது திருவுருவங்கள் எல்லா இலக்கணங்களுடனும் இருக்குமானால் எல்லா நலன்களையும் தருவதாக ஆகமம் சொல்லுகின்றது. எனவே, தெய்வ வடிவங்களை உருவாக்கும்போது மிக்க கவனத்துடனும், விதிப்படியும் அமைக்க முற்படவேண்டும் என்பது இதனால் பெறப்படுகிறது.

சிற்பி ஒருவர் தாம் போகும் வழியில் ஓர் அழகிய மோதிரத்தைக் கண்டெடுத்தார். அவ்வளவில் அம்மோதிரமணிந்தவரின் அங்க அவயவங்களின் அளவு முறைகளும், உடலின் தோற்றமும் அச்சிற்பக் கலைஞரின் உள்ளத்தில் பதிவாகிவிட்டன. அம் மோதிரத்திற்குரியவரைப் பாராமலேயே அவரைப் போன்ற ஓர் சிலையை உருவாக்கினார் அச்சிற்பவல்லுனர்.

இதைக் கண்டோர் வியந்தனர். சிற்பசாஸ்திர விதிகளின் படி அளவு முறைகளை நன்கு உணர்ந்து பழகியதனால் அச்சிற்பக் கலைஞர் ஒரு மோதிரத்தைக்கொண்டே மோதிரமணிந்தவரை சிற்பமாக அமைத்தனர்.

பிரதிமைகளை அமைப்பதற்காக எடுத்துக்கொள்ளும் தனிப்பட்ட ஓர் அங்குல அளவு முறைக்கு "தேஹலப்தாங்குலம்" என்று பெயர். தெய்வவடிவங்களைத் தாபித்து வழிபாடு செய்வதற்காகவே திருக்கோயில்கள் அமைக்கப்பெறுவதால் அத்தெய்வ வடிவங்களை அமைப்பதற்கென ஆகமத்தில் குறிப்பிடப்படும் அளவு முறை பற்றி இங்கு சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இனி, ஆலயங்களின் அமைப்புகளையும், அவற்றின் தோற்றங்களையும் காண்போமாக!

(தொடரும்)

---

## திருவாசகச் சிறப்பு

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசகம்: அதற்கு வாச்சியம்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே.

# அருள்வாக்கு - V

திரு. அ. ச. ஞானசம்பந்தம் எம். ஏ.,

பெரியவர்கள் என்று நம்மால் போற்றப்படுகின்ற பலரும் என்ன காரணத்தால் இப்படிப் போற்றப்படுகிறார்கள் என்று கொஞ்சம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். மிகப் பழங்காலத்தில் வாழ்ந்த புத்தர் இயேசு ஞானசம்பந்தர் நம்மாழ்வார் போன்ற பெரியவர்களிலிருந்து நம்முடைய காலத்திற்குச் சற்றுமுன்னர் வாழ்ந்த ராமகிருஷ்ணபரமஹம்சர், விவேகானந்தர் போன்ற பெரியவர்கள் வரை எடுத்து ஆராய்ந்தால் ஓருண்மை புலப்படும். உலகத்தின் போக்கையே மாற்றியமைத்த பெருமையுடைய இப் பெரியோர்கள் எந்த முறையில் நம்மைவிட மேம்பட்டவர்கள் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். உருவத்தாலும், வடிவத் தாலும், உடல் வலியாலும் ஏன்? கல்வியிலேயும்கூட, இவர்கள் இன்று நம்மில் சாதாரண ஒரு மனிதனைவிட உயர்ந்தவர்கள் என்று சொல்லமுடியாது. இன்னும் சொல்லப்போனால் ராம கிருஷ்ணர், இயேசு, ஞானசம்பந்தர், நம்மாழ்வார் போன்ற வர்கள் எந்தப் பள்ளிக்கூடத்திலும் சென்று கல்வி கற்றதாக வரலாறு இல்லை. ஆகவே அடிப்படையாகத் தேவைப்படுகின்ற கல்வி என்று எடுத்துக்கொண்டால்கூட ஒரு சராசரித் தனி மனிதனைவிட இவர்கள் குறைந்தவர்களே தவிர கல்வி கற்றவர் களாகவே இவர்களைக் கருதமுடியாது. ஒருவேளை, உடல் வலிமையிலாவது மிகவும் மேம்பட்டவர்களோ என்றால், மேலே கூறிய பெரியவர்கள் மிகச் சாதாரணமான உடல் வலிமையுடைய வர்களாகவே தெரிகின்றார்கள். உயர் குடிப்பிறப்புக்கூட இவர் களில் பலருக்கு இல்லை என்று அறிகின்றோம். கோவிலில் பூசை செய்யும் குடும்பத்தில் பிறந்த ராமகிருஷ்ணபரமஹம்சரோ, மாட்டுத் தொழுவத்தில் பிறந்த இயேசுநாதரோ, உழுதுண்டு வாழும் வேளாளருடைய வீட்டில் பிறந்த நம்மாழ்வாரோ உயர் குடியில் பிறந்தவர்கள் என்று சொல்வதற்கும் இல்லை. அப்படி யானால் கல்வி கேள்விகளிலேயும், உயர்குடிப்பிறப்பிலேயும் மிகச் சாதாரணமான நிலையில் இருந்த இவர்கள் எப்படி உலக வரலாற்றையே மாற்ற முடிந்தது?

செங்கிஸ்கான், அலெக்ஸாண்டர், கஜினிமுகம்மது ஆகிய மாபெரும் போர்வீரர்களும், சக்கரவர்த்திகளும்கூட அவரவர்கள் காலத்தில் பெரு வெற்றிபெற்றூர்களே தவிர, இன்று அவர்களுடைய பெயர்கள் வரலாற்று நூல்கள் தவிர வேறு எங்கும் காணப்படவில்லை. ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்துப் பெரும் வெற்றியைப் பெற்ற இவர்கள் இன்று பொய்யாய், கனவாய், பழம் கதையாய் மெல்லப்போய் விட்டார்கள். ஆனால் சாதாரணக் குடிமகனுகத் தோன்றி, கல்வியறிவு கூடப் பெருத இயேசுநாதரும், ராமகிருஷ்ணரும், நம்மாழ்வாரும். உலகவரலாற்றை மாற்றியமைத்தார்கள் என்ருல், இன்றும் அவர்களுடைய பெயர் நிலைநிற்கின்றது என்ருல் அதற்குரிய காரணம் யாதாக இருத்தல்கூடும்?

அலெக்ஸாண்டர் போன்ற சக்கரவர்த்திகளுக்கும் நம்மில் பலருக்கும் இல்லாத ஒன்று இவர்களிடத்தில் இருந்திருத்தல் வேண்டும். இல்லாவிடின் இப்படி உலகவரலாற்றை மாற்றியமைக்கக் கூடிய மாபெரும் சக்தி எங்கே கிடைக்கும்?

நம்மில் காணப்பட முடியாததும் இப்பெருமக்களிடத்தில் மட்டும் காணக்கூடியதுமான அந்தச் சக்தியைத்தான் ஆன்மீக சக்தி என்று குறிப்பிடுகிருேம். அந்த ஆன்மீக சக்தியை மிகுதியாகப் பெற்றுள்ள இயேசு, பரஹம்சர், காந்தியடிகள் போன்றவர்கள் அவ்வொன்று தவிர வேருென்றையும், அதாவது குடிப்பிறப்பு, கல்வி, செல்வம் முதலிய எதையும் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. அவை அவர்கட்குத் தேவையுமில்லை.

உலகம் தோன்றிய நாளில் இருந்து மாபெரும் நிகழ்ச்சிகள் ஏதேனும் நடந்திருக்குமானுல், அந்நிகழ்ச்சிகளின் அடைப்படையில் அந்த ஆன்மீகச் சக்தியுடைய பெரியார்களே இருந்து செயலாற்றி வந்ததை நாம் காணமுடியும். இத்தகைய பெரியவர்களை வடிவம், உருவம், செல்வம், கல்வி முதலிய எவற்ருலும் எடைபோட முடியாது. அப்படிக் கணக்கிடத் தொடங்கினுல் பெரும் தவறிழைத்தவர்களாவோம். இதை மனத்தில் வைத்துக் கொண்டுதான், குறள் "உருவு கண்டு எள்ளாமை வேண்டும். உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னுர் உடைத்து" என்று கூறிச்செல்கிறது.

ஆன்மீக சக்தியால் இத்துணைப் பெரிய காரியங்களை நூற்றுக் கணக்கான பெரியவர்கள், இலட்சக்கணக்கான ஆண்டுகளாகச் செய்து இருப்பினும்கூட, உலகம் இன்னும் ஆன்மீக சக்தியின்

அடிப்படைப் பெருமையை அறிந்துகொள்ளவில்லை. கண்ணன் பெருமையை அறியாமல், துரியோதனன் மாய ஆசனத்தில் கண்ணனை உட்காரச் செய்து அவனையழித்துவிட முயன்றான். அதேபோல இன்றைய உலகம் ஒரு குண்டின் மூலம் மகாத்மாவை அழித்துவிட முற்பட்டது. இடைக்காலத்தில் சிலுவையின் மூலம் இயேசுவை அழித்துவிட இதே உலகம் முயன்றது. என்றாலும் என்ன விந்தை! கண்ணனோ, காந்தியோ, இயேசுவோ அழிக்கப்படவும் இல்லை, அவர்களை அழித்துவிட்டதாகக் கனவு கண்டவர்கள் தாம் மட்டும் வளர்ந்துவிடவுமில்லை.

ஆன்மிகத்தின் பெருமையை நன்குணர வேண்டிய நம்முடைய நாட்டினர் அதனை அறியாமல் மனம் சலித்து இன்று வருந்தி நிற்பதுதான் வருத்தத்தை அளிக்கின்றது. பிறவற்றை எல்லாம் இழந்தாலும் கவலை இல்லை. ஆனால் ஆன்மீகசக்தி, நெஞ்சுறுதி ஆகிய இரண்டை மட்டும் இழந்துவிடக்கூடாது. அதற்கு எதிராக அவர்களுடைய கொள்கைகள் நாளுக்குநாள் உயர்ந்தே, வளர்ந்தே இருந்தன. இருக்கின்றன, நாளையும் இருக்கும்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

புரசைத் திருநெறிக் கழகம் - சென்னை - 7

மேற்படி கழகத்தின் 34-ம் மாதாந்திர வழிபாட்டின்போது (மேற்படி நாளில்) புள்ளிருக்குவேளூர் தேவஸ்தானம் கண்டு வழிபாடு நிகழ்த்தினோம். 101 அன்பர்கள் கொண்ட தனி உந்தூர்திகள் மூலம் வந்து வழிபாடு நிகழ்த்தியதோன்று எங்கள் வழிபாட்டை மிக்கச் சிறந்த முறையில் தேவஸ்தானத்தார் நிகழ்த்தி வைத்தனர். ஆலயம் மிக்க தூயதன்மையில் அழகாக வைத்துள்ளது மிகப் போற்றுதற்கு உரியது. மிக்க மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

(ஒ-ம்) க. வடிவேலாயுதம்
தமிழ்ப் பேராசிரியர்,
(சென்னை கிருத்துவக் கல்லூரி)
தலைவர்.

(ஒ-ம்) செ. சுந்தரம்
15—12—63
செயலன்.

# சமயமும் இளைஞர்களும்

செஞ்சொற்கொண்டல்

வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம்.ஏ.

( மலர் 23, இதழ் 1, பக்கம் 25 இன் தொடர்ச்சி )

**சித்தாந்தம் பக்தி இயக்கம் :**

இனி, சித்தாந்தம் என்ற சொல் வழக்கைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். முடிவு அல்லது கொள்கை என்ற பொருளை உடையதாய் இச்சொல் வழங்குமாயினும், சைவசித்தாந்தத்தையே குறிக்கும் இது. இதுவொன்றே இதன் தனித்தன்மையை விளக்கப் போதுமானதாகும். திருமூலர் திருமந்திரத்திலேயே இச்சொல்லாட்சி முதன் முதல் உள்ளது என்பர் அறிஞர்.

" சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலாற்
சித்தாந்த தேநிற்போர் முத்திசித்தித்தவர்
சித்தாந்த வேதாந்தம் செம்பொருளாதலாற்
சிந்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே "

குமரகுருபரர் (கி. பி. 17ம் நூற்றூண்டு) பண்டார மும்மணிக் கோவையில்,

" ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பிழிந்து
சாரங்கொண்ட சைவசித்தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே "

என்று கூறியருளியுள்ள பகுதி இங்கே ஒப்பிட்டுணர்தற்குரியதாகும். பல்லவப் பெருமன்னனுக விளங்கிக் காஞ்சிக் கயிலாய நாதர் கோயிலைக் கட்டிய இராசசிம்மன் தன்னைச் சைவசித்தாந்தத்தில் வல்லவன் என்று கூறிக்கொள்ளுவதும் அறிதற்குரிய பகுதியாகும். * கிறிஸ்துவுக்கு (எண்ணத்தொலையாத ஆண்டு

---

*" Speaking about Saiva-Sidhanda, Sri S. Radha krishnan has rightly observed :- " While it Prevailed in South India even before the Christian era, it

களுக்கு) முன்பிருந்து தென்னாட்டிற்கேயுரிய திருநெறியாக விளங்கிவந்த இவ்வொருநெறிக்கு சமண, பௌத்த, வைணவ சமயங்கள் இடைக்காலத்தில் தக்க எதிர்ப்புக்களாகவிளங்கலாயின. ஆட்சிச் செல்வாக்கு வாய்ந்த சமயத்தினர், பிற சமயத்தினரை வருத்திய நிலைகளையெல்லாம் நம் வரலாற்றிற் காண்கின்றோம்; நாயன்மார்கள் காலத்தில் முறுகி வளர்ந்த பக்தி இயக்கம் நம் சமய நிலைபேறுடைமைக்கு நற்றுணையாக இருந்தது என்று கூறவேண்டும்.

சமயவாழ்வின் இன்றியமையாமை :

நம் இளைஞர் உலகத்தினரில் பெரும்பாலோர்க்கு இவ் வடிப்படைக்கொள்கைகள் நன்கு விளக்கப்பெறுதல்வேண்டும், இல்லையேல் சமயப் பற்றில்லாமல் வளர்ந்து நிறைவு பெருமற் போகும் அரைகுறை வாழ்வாக அவர்கள் வாழ்வு முடிந்துவிடும் என்று எச்சரித்தல்வேண்டும். சைவ இளைஞர்கள் தாம் இந் நெறியைப் பின்பற்றுவதோடு, பிற இளைஞர்களுக்கும் உண்மை நெறி காட்டும் வகைமையை ஒல்லும் வகையான் முயலுதல் வேண்டும் என்பது என் விருப்பம். நாயன்மார் காலத்தில் நம் நாடு எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தால் நம் உள்ளம் எத்துணை மகிழ்ச்சி அடைகின்றது ! தமிழ்ப்பெரு மக்கள் சமுதாயம் அனைத்தும், கடவுள் உணர்வில் திளைத்து. முழுமையான சமய வாழ்வு தலைப்பட்டிருந்த அரிய நிலையை அன்று காண்கின்றோம். அந்தச் சீரிய நிலை மீண்டும் இச் செந்தமிழ்நாட்டில் வர வேண்டாவா ?

சமயம் என்பது ஏதோ தேவையற்ற ஒன்று என்று தம் அறியாமையான் எண்ணுகின்ற "தொற்றுநோய்" மனப் பான்மை பரவிவரும் இளைஞர்க்கு இடையே சமய வாழ்வின்

---

received a great access of strength from its opposition to Buddhisim and Jainisam, which it, along with Vaishnavisim, overcame about the fifth or the sixth century after Christ" — Introduction and History of Saivasiddhanta — P. 12.

நிலைபேறுடைமையை இனிது விளக்குதல் வேண்டும். †" சமயம் இல்லாமல் தனியொரு மனிதன் வாழ்வதென்பது இயலாத ஒன்றாகும். சமயம் என்று ஒன்று வேண்டுமானால் இருந்துவிட்டுப் போகட்டும்; நாம் அதனோடு தொடர்புகொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லுவோரும் உண்டு. மூக்கால் சுவாசித்துக்கொண்டே தமக்கு மூக்கு இல்லை என்று சொல்லும் மனிதர்களைப் போன்றவர்கள் இவர்கள்" என்று அரசியல் ஞானியாக விளங்கிய அண்ணல் காந்தியடிகள் மெய்ம்மொழியை இவர்களிடையே எடுத்துக்கூறுதல்தகும்; இதைவிட வேறு எப்படித்தான் விளக்குதல் இயலும்?

## அருள் வீரம்

உண்மையான சமயம் என்பது அச்சத்தை அறியாத அருள் வீரம்உடையதுஆகும்; ஆன்மபலத்தினால் விளையும் அருள் உறுதி உடைய சமயச் சான்றோர்களுக்கு அச்சம் ஏது? "அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை" என்ற உறுதி அவர்களுக்கு இயல்பாகி விடுகிறது; இதனையெல்லாம் கண்ட காந்தியடிகள் *"அச்சம் எங்குள்ளதோ அங்கே மெய்யான சமயம் இல்லை" என்று கூறிப்போந்தார் சேக்கிழார் பெருமானும்,

‡" ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலர்
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ"

என்று அழகுறக் கூறுவது இங்கு அறியத்தக்கது.

---

† "No man can live without Religion. There are some who in the egotism of their reason declare that they have nothing to do with Religion. But it is like a man saying that he breathes but that he has no nose" — My Religion - P. 3.

* Ibid - P. 65 ("Where there is fear there is no religion."

‡ பெரியபுராணம் - 144 - (சமாஜப்பதிப்பு)

அடியார்களுடைய அஞ்சாமையை விளக்குதற்கு அப்பரடிகளுடைய திருவாக்கை நன்கு உணர்ந்தால் போதும். அஞ்சாமை கொண்டு அருள் வீரராகத் திகழ்ந்த அப்பரடிகளுடைய அருள்வாக்குகள் இன்றைய இருபதாம் நூற்றாண்டில் வாழும் இளைஞர்களுக்குத் தக்க அறிவுரையாக உள்ளன.

"மண்பா தலம்புக்கு மால்கடல்மூடி மற்றேழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர்வீழினும்அஞ்சல்நெஞ்சே"[1]

"வானந் துளங்கிலென் மண்கம்பமாகிலென்......
ஊனமொன்றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே"[2]

"தப்பி வானம் தரணி கம்பிக்கிலென்
அப்பனுருளார் அஞ்சுவதென்னுக்கே"[3]

"நாவலந்தீவகத்தினுக்கு நாதரான
காவலரே ஏவிவிடுத்தாரேனும் கடவமலோம்"[4]

முப்பெரும் பண்புகள் :

சமய வாழ்வு தலைப்படுவோர் அன்பும் அறனும் ஆகிய பண்பிற்றிரியாதவராக இருத்தல்வேண்டும்; அன்பும், அன்பின் முதிர்வாகிய அருளும் உடையராய் அறவாழ்வு இயற்றுவோரே சமயவாணர் என்று சாற்றப்பெறுவர். அன்பே சிவம் என்று கொள்வது நம் மரபு; அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்றும், 'அருளது சத்தியாகும்' என்றும் நம் சாத்திரம் பேசும். அறவாழி அந்தணனாக இறைவன் உள்ளான். சமயம் இம் முப்பெரும் பண்புகளையே விதந்து பேசுவது அறிந்துணரத்தக்கது.

"ஈசனுக்கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்
பேசுவதென் அறிவில்லாப் பிணங்களைநாம் இணங்கில்
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் ; விடுநீ"[5]

என்று அருணந்தி சிவாசாரியரும் அருளியுள்ளமை இங்கு அறிதற்குரியதாகும்.

---

[1-4] அப்பர் தேவாரம் : 4 - 94 - 9; 4 - 112 - 8; 5 - 77 - 6; 6 - 98 - 6.

[5] சிவஞான சித்தியார், சுபக்கம் - 12ம் சூத் - 2.

## ஆழ்ந்த சிந்தனையும் சமயப் பொறையும் :

இளைஞர்கள் எதனையும் மேம்போக்காக அறிதல் அறவே நீக்கப் பெறுதல் வேண்டும்; ஆழ்ந்துணரத்தக்க ஆற்றலை அவர்கள் நன்கு பெறுதல்வேண்டும். ஆழ்ந்துணரும் அறிவே சிறப்புடையது. அவ்வறிவே நிலைத்த பயனையும் விளைக்கும். சமயநெறி நிற்கும் இளைஞர்கள் மற்றொன்றையும் மறந்து விடலாகாது. சமயப் பொறை என்ற உயர்பண்பே அதுவாகும். சமயங்கள் அனைத்தையும் ஒப்பமதிக்கும் உயர் நோக்கும், அதே வேளையில் தாம் மேற்கொண்டுள்ள சமயத்தில் அழுந்திய பற்றும் நம்பிக்கையும் உடையராதல் மிக இன்றியமையாததாகும்.

"விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயம்செய்தே
எரிவினற் சொன்னாரேனும் எம்பிராற்கேற்றதாகும்"*

என்று, பழுத்து முதிர்ந்த அருளாளராகிய அப்பரடிகள் அருளும் அறிவுரை உள்ளத்தே உறுதிப்படுதல் வேண்டும். அறுவகைச் சமயங்களும் ஒரூர்க்குச் செல்லும் ஆறுவழிகளைப் போன்றவை என்பர் திருமூலதேவர். அத்தகைய உயர்ந்த நோக்குடையவராய்ச் சிவநெறி இளைஞர்கள் பண்பட்டு மேம்படுதல்வேண்டும். இத்தகு உயர் பண்புகளும் சிந்தனைகளும் சமய இளைஞர்களுக்குப் பெருகுமாயின் அதனால் நாடு நலம் பெருகி மண்ணிலேயே விண்ணைக் காணும் மாண்பு விளையும் அல்லவா ?

* அப்பர் தேவாரம், 4 - 60 - 9.

---

மதிப்புரை

## திருக்கல்யாணம்

ஆசிரியர் : திரு. ஆ. ஈசுவரமூர்த்திப் பிள்ளை ; வெளியீடு : அறுபத்துமூவர் திருமடத்தினர், தடிவீரையன்கோயில்தெரு, திருநெல்வேலி ; பக். 32.

இந் நூலாசிரியர் சைவசித்தாந்த பண்டித பூஷணமாக உள்ளவர். நல்ல உறைப்புடைச் சிவத்தொண்டர். திருக்கல்யாண உற்சவத்தின் தத்துவத்தைத் தர்க்கரீதியில் விளக்கியுள்ளார். தக்கபுராண மேற்கோள்களுடன் விளங்குகின்றது இச்சிறுநூல். ஆசிரியருடைய ஆழ்ந்த புலமையை விளக்கக் கூடிய இந்நூல் எல்லா மக்களுக்கு பயன் படக் கூடியதாகும். ஆசிரியர்வழி வெளிவரும் நூல்களைச் சமய உலகு பெற்றுக் கற்றுப் பெரும் பயன் எய்துமாறு விரும்புகின்றோம். —சொ. சிங்காரவேலன்

# வாழியாதனின் வள்ளன்மை

வித்துவான். திருமதி. ப. நீலா

கொடைமுரசென்றும், படைமுரசென்றும், மணமுரசென்றும் "வென்றதன் பச்சை சீவாது போர்த்த" மூவகை முரசங்கள் தமிழகத்தில் ஒலித்துக்கொண்டிருந்த வேளையில், ஆண்ட மூப் பெரும் அரச குலங்களில் சேரர் குலமும் செழித்திருந்தது.

போரெனிற் புகலும் வீரமறவர்கள் சேரநாட்டுச் செந்தமிழர் கள். போந்தைக் கண்ணியைச் சூடிவிட்டால் ஏந்திய வாளுடன் நிமிரும் காளைகளின் திருக்கரங்கள். புகலே அரிதென்ற பகைவர் மதிலைக் கைப்பற்றி விட்டாலோ வலம்படு முரசு விண்ணதிர ஆர்க்கும். குடையலர் காந்தள் தன் கொல்லிச் சுனைவாய்த் தொடையவிழ் தண் குவளை சூடாத வானவன் போரெதிரிற் போந்தையாம் பூச்சூடி வென்று களங்கொண்ட வீரவரலாறு அநேகம்.

வீரத்திருமகளைப் புயங்களில் தாங்கிய வாழியாதன் பதிற்றுப் பத்து என்னும் பழந்தமிழ் நூலுள் பத்துப் பாக்களால் புகழப்படு கின்றான். அதிலிருந்து இதோ ஒரு பாடலின் காட்சி :-

பசியுடையொக்கல் தலைவன் பாடுவது போல கபிலர் பாடி வாழியாதனின் வள்ளன்மையைக் கூறும் பாங்கு படித்தின்புறற் குரியது.

வேந்தர் பலர் உளர் :

செருக்களம் கண்ட பெருந் தமிழ் மன்னர் பலர் உளர். வலம்படு முரசம் ஒலிக்கக் கொற்றம் கொண்ட கொற்றவர்கள் பலர் இருந்தும் பரிசிலர்களுக்குப் பயனில்லையே!

புலவர்களைப் போற்றும் புரவலனாக வாழியாதன் மட்டுமே விளங்குகின்றான் என்று பாடல் பகருகின்றது.

அதியமான் நெடுமானஞ்சி இறந்ததும் ஔவை கூறுகிறாள் :

" இனிப் பாடுநரு மில்லைப் பாடுநர்க்கொன் றீகுநருமில்லை
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க் கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே." —புறநா - 235.

ஔவையின் கூற்றை யொப்பக் கூறுகிறார் கபிலர் :-

" வலம்படு முரசின் வாய்வாட் கொற்றத்துப்
பொலம்பூண் வேந்தர் பலர்தில் லம்ம "

என்று பாடும் பாவலரின் பசிப் பகைவனாக விளங்குகின்றான் செல்வக் கடுங்கோ வாழியாதன்.

அமையா ஆசை!

கொள் என்று அள்ளிக்கொடுத்தாலும் தரமறிந்து கொடுக்கும் பாங்கு சிலருக்கே அமையும். வாழியாதன் வழங்கும் பொருட்களைப் பெறும்பேறு பெற்றோர் உரைசால் வேள்விகளை முடித்துப் புகழ்பெற்ற கேள்வி அந்தணர்கள்; பொய்யறியா நாப்படைத்தோர். பொய்யறியாமையுடன்கூட அறங்கரைந்தும் விளங்கிய நாவையுடையோர்.

'மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை'?

என்ற வள்ளுவனாரின் சொற்படி கேள்வியறிவும் இயற்கையறிவும் ஒருங்கே அமைந்தவர்கள். இப்படிப்பட்ட அந்தணப் பெருமக்களுக்கு அருங்கலங்கள் பலவற்றை நீர் வார்த்துக் கொடுப்பதன் காரணமாக மணல்மலிந்த முற்றம்கூட சேறாகிவிட்டது. சேறான முற்றத்தில் வீறுயர் களிறுகள் நிற்க வெறுப்புக் கொண்டனவாம். அப்படிக் கொடுத்தும்கூட கொடுப்பதில் உள்ள ஆசை அமையவில்லையாம் வாழியாதனுக்கு; என்னே அவனது கொடையுளம்!

அலங்கும் பாண்டில் :

பரிசிலர்களன்றிப் பிறர் செல்லமுடியாத காவல் பொருந்திய அப் பெருமனையின் வாயிலின்கண்ணே கூத்தர்கள் வந்துகொண்டிருப்பதைக் கண்டால் வாழியாதன் என்ன பரிசு அவர்களுக்குக் கொடுப்பான் தெரியுமா!

மண்டமர் பல கடந்து மதுகையால் வாகை கொண்ட அவன் மாற்றுரை வென்று கொண்ட குதிரைகளையும், அசைந்து ஆடி வரும் அழகுத் தேர்களையும் அவர்களுக்குக் கொடுக்கச் சொல்வான்.

வனப்பற்ற முறையில் வழங்குவதை வாழியாதன் விரும்ப மாட்டான். ஆகவே அவ்வவற்றிற்குரிய அணியிழைகளை அணிவித்துக் கொடுக்கச் செய்கிருன். கத்தரிகையால் மட்டஞ்செய்யப் பட்ட பிடரிமயிரை உடைய 'கொய் சுவல்' குதிரைகளையும் அவைகளால் ஈர்த்துச் செல்லப்படும் அலங்காரத் தேர்களையும் ஈவதில் தயங்கவில்லை அவன்.

அணிமணி பூட்டிய தன் அழகுத் தேரை ஆதரவற்ற முல்லைக் கொடிக்குத் துணையாக்கிவிட்டு அகன்ற பாரியின் பெருங்கொடை இங்கு நினைவு கூரத்தக்கது.

" ஊருடன் இரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி" — புறநா. 201.

என்று பாரி புறநானூற்றில் புகழப்படுகிருன்.

கோடையும் கொண்டலும்:

மாரியையும் பாரியையுமே இணைத்துப் பாடினர் ஒரு புலவர்'

" பாரி பாரி என்று பலவேத்தி
ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டீண்டு உலகுபுரப்பதுவே "

என்று. ஆனல் வாழியாதனைப் பாடும் கபிலர் பெருமான் பழிப்பது போலப் புகழாமல் - வெளிப்படையாகவே 'மழையினும் பெரும் பயம் பொழிதி' - என்று மனம்விட்டுப் பாடுகிருர். மழையைக் கொண்ட மேகம் மலர்ந்த கரிய நெய்தல் பூவைப் போல உள்ளதாம்.

" மைபடு மலர்க்கழி மலர்ந்த நெய்தல்
இதழ்வனப் புற்ற தோற்றமொ டுயர்ந்த மழை "

என்று மேகம் சொல்லப்படுகின்றது. கொண்டலை மிஞ்சும் கொடையுடையான் என்பது மணல் மலிந்த முற்றமும் சேருகி விளங்கும் தன்மையிலிருந்து புலப்படுகிறதே!

முரண்சிதைத்த மோய்ம்பு:

கொடை வலிமை மட்டுமல்ல படைவலிமையும் கொண்டவன் வாழியாதன். கூற்றினத்தன்னர் கொடுவில் இடனேந்தி பாற்றிளம் பின்படர முன்படரும் ஏற்றமுடையவன். ஒன்றாரை வென்று களங்கொள்ளும் வீரவாளுடையான்; ஆகவே மாற்றார் களின் மத்தியில் செஞ்ஞாயிறெப்ப விளங்குகின்றான். ஞாயிற் றின் ஒளிக்குமுன் விண்மீனினங்கள் என்ன செய்யமுடியும்!

மாயிரு விசும்பின்கண் உள்ள பல மீன்களின் ஒளி கெடும்படி யாகத் தோன்றிய ஞாயிறெப்ப மாற்றார் ஆற்றல்கெட தோற்றம் கொண்டவன்.

" மலர்க்கதிர்ப் பரிதியின் பெருமையை
அகலிருவிசும்பின் பாயிருள் பருகிப்
பகல் கான் றெழுதரும் பல்கதிர்ப் பரிதி "

என்று பெரும்பாணாற்றுப் படையிலும் காண்கின்றோம்.

இவ்வாறு மடியாத உள்ளம் கொண்ட வாழியாதனைப் பாசறையின் கண்ணே பார்க்க வந்த புலவன் ஒருவன் பாடுவது போலப் பாடுகிறார் கபிலர்.

கொடைத்தொழிலில் அமையா ஆசைகொண்ட ஆண்டகை. ஆடுங்கூத்தர், பாடும் பாணர் எவர்வரினும் அணி அணிந்த அலங்கும் பாண்டில்களைக் கொடுத்துப் போற்றுபவன். அறங் கரை நாப்படைத்த அந்தணர்க்கு அருங்கலம் பலவுங் கொடுக் கும் பண்புள்ளவன் - பாணர்களின் பசிக்குப் பகைவனாகிய வாழியாதனே! நின்னை அரண்மனையிடத்தே காணாமல் பாசறைக் கண்ணே காணவந்துள்ளேன் என்று புலவர் பாடி முடிக் கின்றார். ஒரே பாட்டில் பகைகெடுக்கும் வீரம். மழையைவென்ற ஈகை. பண்புடைய பெருநோக்கம் எல்லாவற்றையும் அடக்கிக் கூறிய பொய்யா நாவிற் கபிலரின் பாடலை இதோ முழுமையாகக் காணலாம்.

## உரைசால் வேள்வி

" வலம்படு முரசின் வாய்வாட் கொற்றத்துப்
பொலம் பூண் வேந்தர் பலர்தில் லம்ம
அறங்கரை நந்து வயங்கிய நாவிற் பிறங்கிய

உரைசால் வேள்வி முடித்த கேள்வி
அந்தண ரருங்கல மேற்ப நீர்பட்
டிருஞ்சே றாடிய மணன்மலி முற்றத்துக்
களிறுநிலை முனைஇய தாரருந் தகைப்பிற்
புறஞ்சிறை வயிரியர்க் காணின் வல்லே
எஃகுபடை யறுத்த கொய்சுவற் புரவி
அலங்கும் பாண்டி லிழையணிந் தீமென
ஆனாக் கொள்கையை யாதலி னவ்வயின்
மாயிரு விசும்பிற் பன்மீ னொளிகெட
ஞாயிறு தோன்றி யாங்கு மாற்றார்
உறுமுரண் சிதைத்தநின் னோன்தாள் வாழ்த்திக்
காண்கு வந்திசிற் கழறொடி யண்ணல்
மைபடு மலர்க்கழி மலர்ந்த நெய்தல்
இதழ்வனப் புற்ற தோற்றமொ டுயர்ந்த
மழையினும் பெரும்பயம் பொழிதி யதனால்
பசியுடை யொக்கலை யொரீஇய
இசைமேந் தோன்றனின் பாசறை யானே !

— பதிற்றுப்பத்து - ஏழாம்பத்து 4.

---

மதிப்புரை

## காசியாற்றுப்படை

ஆசிரியர்: சுன்னாகம் திரு. கு. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை B. A., கிடைக்குமிடம்: புலவரகம், மயிலணி, சுன்னாகம் (P. O.) இலங்கை. பக். 24. விலை 35 ந. பை.

இந்நூலில் இதன் ஆசிரியர் 1957-ல் காசி சென்று வந்த தம் அநுபவங்களை 506 வரிகளில் நிலைமண்டில ஆசிரிய யாப்பில் எடுத்துரைத்துள்ளார். பாட்டு நலம் சிறந்து விளங்குகின்றது. 136-142 வரிகளில் ஆந்திரம் பிரிந்தமையைத் தமிழுணர்ச்சி ததும்பப் பாடுகிறார். எளியநடை - நல்ல சொல்லாட்சி. தமிழ்ப் புலவர் மரபு நெறிவந்த இவ்வாசிரியர் அழகுறப் பாடியுள்ள இந்த ஆற்றுப்படையில் புதுமை நலம் தவழ்கின்றது. தமிழ் அன்பர்கள் விரும்பிப் பயின்று இன்புறலாம்.

— சொ. சிங்காரவேலன்

# தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

( மலர் 22, இதழ் 11, பக்கம் 584 இன் தொடர்ச்சி )

## 4. ஒருவினை ஒடுச்சொல் :

ஒன்றனெடு ஒன்றியைந்து தொழிற்படுதற்கண் வரும் உருபு 'ஒடு' உருபாம். அது உயர்ந்த பொருளை உணர்த்தும் பெயரி னிடமாகவே தோன்றும். (எ - டு) 'ஆசிரியனெடு மாணக்கர் வந்தார்' என்றவிடத்து மாணவரினும் ஆசிரியர் உயர்ந்தா ராகலின் 'ஒடு' உருபு அப்பெயரிடத்து வந்தமை காண்க.

இக்கருத்து பொருள் மயக்கம் அதிகாரம்பட்ட இவ்விடத்துக் கூறுதற்கு யாதொரு இயைபுமின்று. சேனவரையரும் இன்ன பொருட்கண் இன்ன வேற்றுமை இன்னவாருகும் என்னும் சிறப் பிலக்கணம் வேற்றுமையியலில் கூறுதற்கு இயைபில்லை யாதலின், மூன்ரும் வேற்றுமைக்குரிய சிறப்பிலக்கணமாகிய இதனை ஈண்டுக் கூறினர் என்பர். அவர் கருத்தின்படியும் இந்நூற்பா வின் கருத்துச் சிறப்பிலக்கணமாகுமேயன்றி மயக்கமாதற்கு ஏலாமை யறிக. (8)

புறனடை : இதுகாறும் கூறப்பட்ட பொருள் மயக்கமே யன்றி வேறு பிற வருமாயினும் அவ்வவற்றின் உண்மைநிலை ஓர்ந்து ஏற்றுக் கொள்க என்பதாம். (18)

## 5. உருபு மயக்கம் :

ஒரு உருபு நிற்க வேண்டிய இடத்தில் பிறிதோர் உருபு இயைபின்றி நிற்குமாயின் அது உருபு மயக்கமாம். இதனையே 'தன் பொருளில் தீர்ந்து பிறிதொன்றன் பொருட்கண் சேறல்' என்பர் சேனவரையர்.

(அ) ஒரு வேற்றுமைப் பொருள் மற்ரெரு வேற்றுமை உருபால் கூறப்பட்டதாயினும் அவ்வுருபு மயங்கி வந்தமையின்

அவ்வுருபு சென்ற வழியே பொருள் செல்லாது பொருள் சென்ற வழியே உருபு செல்லும் என்பதாம். (எ・டு) 'கிளையறி நாணற் கிழங்கு மணற்கு ஈன்ற' என்றவிடத்து நான்கனுருபு இருப்பின் பொருள்படாமையின் ஏழனுருபாகத்திரித்து 'மணற்கண்' எனக் கொள்ளவேண்டும் என்பதாம்.

இங்ஙனம் 'மணற்கு' என்பதில் உள்ள இவ்வுருபை விடுத்து 'மணற்கண்' என ஏழனுருபே கொள்ளப்படுதலின், தன் பொருளில் தீர்ந்து பிறிதொன்றன் பொருட்கண் சேறல் என்னும் உருபு மயக்கத்திற்கு ஏற்புடையதாயிற்று.

(ஆ) ஆறும் வேற்றுமையது உருபு அஃறிணைக்கே உரியது. அதனை உயர்திணையிடத்து விரிக்க நேரின் நான்கனுருபிலேயே விரிக்க வேண்டும் என்பதாம். (எ・டு) 'நம்பி மகன்' என்ற விடத்து 'நம்பியது மகன்' என விரிக்காது, 'நம்பிக்கு மகன்' என்றே விரிக்க வேண்டும் என்பதாம்.

நம்பி மகன் என்ற தொடரில் ஆறனுருபு இல்லையேனும் அவ் வேற்றுமைக்குரிய கிழமைப்பொருள் உளதாதல் நன்கு விளங் கும். ஆறனுருபு அஃறிணைக்கே உரியதாகும். அந்நிலையில் 'நம்பியது மகன்' என விரிப்பதே தவறுகும், ஆதலின் ஆறுவ தன் பொருண்மைக்குரிய இத்தொடரை அதற்குச் சிறிதும் இயை பில்லாத நான்கனுருபிலேயே வைத்து விரித்தலின் இது உருபு மயக்கமாயிற்று.

இதனைப் பொருள் மயக்கமெனச் சேனவரையர் கருதினும், நச்சினர்க்கினியரின் கருத்துப்படி 'உருபு மயக்கமே' யாம். (11)

6. வேற்றுமைக்கு ஓதிய இலக்கணத்தில் பிறழ்ந்து வழீஇ யமைவன :

(அ) உருபு தொடர்ந்தடுக்கல் :

பல உருபும் தம்முள் தொடர்ந்து அடுக்கி ஒரு சொல்லால் முடியினும் அப்பொருள் வேறுபடாதிருக்குமாயின் அங்ஙனம் முடிதல் இழுக்கில்லை.

ஓவ்வொரு உருபும் தனித்தனி முடிக்குஞ் சொல்லால் முற்றுப் பெறுவதே முறை. அங்ஙனமன்றி உருபுகள் பல தொடர்ந்து ஒரு முடிக்குஞ் சொல்லால் முற்றுப் பெறுதல் வழுவாயினும் வழு அமைதியாகக் கொள்க என்பதாம். (19)

### (ஆ) உருபுகள் விரிந்து நிற்கும் இடம்:

ஆறு உருபுகளும் அவ்வத் தொடர்க்கண் இறுதியிலும், இடையிலும் விரிந்துநிற்கும். (20) அவை விரிந்து நிற்றலே யன்றி அவ்வத்தொடர் இடையில் மறைந்தும் வரும். இறுதியில் மறைந்து வருங்கால் 'ஐயுங்' 'கண்ணு'மே மறைந்துவரும். ஆறும் வேற்றுமையுருபு தன்னையொழிந்த பிற உருபுகளையே ஏற்றுவரும்; சிறுபான்மை தன்னையும் ஏற்று வரும்.

"ஆற னுருபு மேற்குமவ் வுருபே" (பெயரியல் - 36) என நன்னூலாரும் கூறுமாறு காண்க.

உருபுகள் விரிந்து நின்று தம் பொருள் உணர்த்துவதும், பெயர் உருபேற்பதுமே முறை. அங ்ஙனமன்றி உருபுகள் மறைந்து நின்று தம்பொருள் உணர்த்துவதும், ஓர் உருபு பிற உருபுகளை ஏற்பதும் வழுவே ஆயினும், வழுவமைதியாகக் கொள்க என்பதாம். (21, 22)

[தொடரும்]

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam,

Sri Amirthakateswaraswami Devasthanam, Tirucadaiyur.

Myself and my entire family have the occassion to visit this temple and offer worship. The temple is kept in the best condition and the pujas etc., are carried on timely. The sanctity is kept up. The credit goes to His Holiness of Dharmapuram Adhinam.

K. Gayathrinathan,
Dy. S. P.
Thanjavur.

V. G. Krishna Iyer,
Retd. Police Officer,
29—12—63.

# செய்திகள்

தருமையாதீனத்தில் :

## குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா சோபகிருது ஆண்டு மார்கழித்திங்கள் 17-ஆம் நாள் (1—1—64) புதன்கிழமையன்று மிக்க சிறப்புடன் நடைபெற்றது.

காலை மாலை இருவேளைகளிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்களால் நிகழ்த்தப் பெற்றன. மாலை வழிபாட்டில் குருபூஜை விழா மலராக 'சிவ க்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா' என்ற நூலை வெளியிட்டு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளி திருக்கை வழக்கமும் செய்தருளினார்கள். காலை வழிபாட்டிற்குப் பின்னர் குருபூஜை விழாவைக் குறித்து திருமுறைச் சொற்பொழிவுகள் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்கள், ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்கள், ஆதீன வேத சிவாகம பாடசாலை ஆசிரியர் முதலியவர்களால் நிகழ்த்தப்பெற்றன. குருபூஜை விழாவிற்கு மாயூரம் முதலிய பல இடங்களிலிருந்தும் பல அன்பர்கள் வந்து வழிபட்டுய்ந்தனர்.

## ஏகதின லக்ஷார்ச்சனை

தருமையாதீனத்தில் திருக்கோயில்கொண்டு அருள்வழங்கும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு சோபகிருது ஆண்டு மார்கழித்திங்கள் 19-ஆம் நாள் (3—1—64) வெள்ளிக் கிழமை நான்காவது கோடியருச்சனையில் ஏகதின லக்ஷார்ச்சனையும், விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சிறப்புற நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் எழுந்தருளி வழிபட்டார்கள். அன்பர்கள் பலரும் வந்து வழிபட்டுய்ந்தனர்.

## பாவை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமை யாதீனத்தில் ஸ்ரீ அஷ்டாதசபுஜமகாலக்ஷ்மி துர்க்காம்பிகைத் திருக்கோயிலில் சோபகிருது ஆண்டு மார்கழித்திங்கள் 1-ஆம் நாள் (16-12-63) திங்கட்கிழமையன்று பாவை மாநாடு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாணையின் வண்ணம் தொடங்கப் பெற்றது. ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும், கல்லூரிப் பேராசிரியர்களும், கல்விநிலையங்களின் மாணவர்களும் விநாய கப்பெருமானை வழிபட்டு சிவபுராண பாராயணத்துடன் ஆதீன ஆன்மார்த்தமூர்த்தியாகிய ஸ்ரீசொக்கநாதப்பெருமானை வழிபட்டு ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தருமபுரீசுவரர் திருக்கோயில்களுக்கும் சென்று வழிபட்டுப் பின்னர் ஸ்ரீ துர்க்காம்பிகைத் திருக்கோயிலை யடைந்து முறையாக வழிபட்டனர். மாநாடு ஸ்ரீ துர்க்காம்பிகை சந்நிதியில் தொடங்கப்பட்டது.

கல்லூரி முதல்வர் செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., அவர்கள் எல்லோரையும் வரவேற்றார்கள். திருக்கயிலாய யாத்திரை பன்முறை புரிந்த ஸ்ரீ மௌனிபாபா சுவாமிகள் அவர்கள் பஜனை நிகழ்த்தினர்கள், திருநெல்வேலி இந்துக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் செந்தமிழ்ச்செம்மல், வித்துவான். திரு. கு. அருணசலக் கவுண் டர் அவர்கள் பாவை மாநாட்டுத் தொடக்கவுரை யாற்றினர்கள். தருமையாதீனப் புலவர் வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் "இருபாவை" என்ற தலைப்பில் சிறந்த தொரு சொற்பெருக்காற்றினர்கள். ஆதீனக் கல்லூரிப் பேராசிரி யர் வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் நன்றி நவின்றார்கள். இறைவாழ்த்துடன் மாநாட்டு நிகழ்ச்சிகள் நிறை வெய்தின.

## ஆதீன தேவஸ்தானங்களில்
## பாவை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானங்களில் பாவை மாநாடு ஆண்டு தோறும் நடைபெறுவதுபோல் இவ்வாண்டும் சிறப்புற நிகழ வேண்டுமென்று அருள் பாலித்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாணையின் வண்ணம் ஆதீனத் திருக்கோயில்களில் பாவை மாநாடுகள் சிறப்புற நிகழ்ந்தன.

மாயூரம் - ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி திருக்கோயிலில் :

மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி திருக்கோயிலில் சோபகிருது ஆண்டு மார்கழித்திங்கள் 2-ஆம் நாள் (17—12—63) செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு சிவபுராண பாராயணத்துடன் வழிபாடு நிகழ்த்திய பின்னர் மாயூரம் திரு. B. திருஞானம் பிள்ளையவர்கள் சிறப்புரையுடன் மாநாடு தொடங்கப்பெற்றது. ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்கள் வித்துவான், சிரோமணி. திரு வி. சபேசன், தருமையாதீனப் புலவர், வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார், திருநெறிச்செம்மல் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் ஆகியோரால் முறையே "திருவாசகம், இருபாவை, திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. தலைவர் நன்றியுரைக்குப்பின்னர் மாநாடு இறை வாழ்த்துடன் இனிது நிறைவெய்தியது. பலபெருமக்கள் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

கருங்குயில்நாதன் பேட்டையில் :

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமான கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 20—12—63 வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்குப் பாவைமாநாடு சிறப்புற நிகழ்ந்தது. அம்மாநாட்டில் ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், திருநெறிச் செம்மல், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் "இருபாவை" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினுர்கள். ஆதீனத்தேவார பாடசாலை மாணவர்களால் திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன. பலரும் வந்து கேட்டு இன்புற்றனர்.

சீகாழியில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் பாவை மாநாடு சோபகிருது ஆண்டு மார்கழித்திங்கள் 11-ஆம் நாள் வியாழக்கிழமை தொடங்கி இரண்டு நாட்கள் (26, 27—12—63) சிறந்த முறையில் நடைபெற்றது.

26—12—63 வியாழக்கிழமை மாலை 6-மணிக்குத் திருக்கோயில் வழிபாட்டுக்குப் பின்னர் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தொடக்கவுரை யாற்றினுர்கள்.

தேவகோட்டை, தருமையாதீனப்புலவர், பாலகவி, வயிநாகரம், திரு. வே. இராமநாதஞ் செட்டியார் "திருவெம்பாவை" என்ற பொருளிலும், நெல்லை. இந்துக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், பைந்தமிழ்ச்செம்மல், வித்துவான். திரு. கு. அருணசலக்கவுண்டர் "பாவை இலக்கியங்கள்" என்ற பொருளிலும், புதுக்கோட்டை, மகளிர் ஆஸ்ரமம், திருமதி. பிருந்தாதேவி "பாவைப்பெண்கள்" என்ற பொருளிலும், தூத்துக்குடி, வ. உ. சி. கல்லூரி முதல்வர், திரு. A, சீனிவாசராகவன் M. A., "திருப்பள்ளியெழுச்சி" என்ற பொருளிலும் சொற்பொழிவாற்றினர். இரவு திருவாரூர், திரு. K. சாம்பசிவ முதலியார் B. A., B. T., இன்னிசைச் சொற்பொழிவும் நிகழ்ந்தது.

27—12—63 வெள்ளிக்கிழமை தருமையாதீனப்புலவர். திரு. க. வச்சிரவேலு முதலியார் B. A., L. T., (காஞ்சிபுரம், பச்சையப்பன் உயர்பள்ளி தலைமையாசிரியர்) "இருபாவை" என்ற பொருளிலும், பண்டித வித்துவான், திரு கு. சுந்தரமூர்த்தி (திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்) "மார்கழிநீராடல்" என்ற பொருளிலும் சொற்பொழிவாற்றினர். பின்னர் கும்பகோணம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையாரின் பொம்மலாட்டம் நிகழ்ந்தது. பலர் வந்து கண்டும் கேட்டும் உய்ந்தனர்.

வேளூரில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் பாவை மாநாடு சோபகிருது ஆண்டு மார்கழித்திங்கள் 13-ஆம் நாள் சனிக்கிழமை தொடங்கி இரண்டு நாட்கள் (28, 29 - 12 -63) நடைபெற்றது. சீகாழி திரு. ரங்காச்சாரியார் B.A , L.T., "பாவை நூற்பயன்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். பின்னர் 'உபந்யாச சக்ரவர்த்தி' சேங்காலிபுரம். பிருமஸ்ரீ. அனந்தராம தீட்சிதரின் பக்திப்பிரசவனம் நடைபெற்றது. 29—12—63 மாலை 6-மணிக்கு அண்ணுமலைப் பல்கலைக்கழகம். வித்துவான். திரு. வீ. உலகஊழியர் (தமிழ் விரிவுரையாளர்) "இருபாவை" என்ற தலைப்பிலும், அண்ணுமலைப் பல்கலைக் கழகம் வித்துவான். திரு. அ. நடேச முதலியார் (தமிழ் விரிவுரையாளர்), "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்பிலும், திருக்கருகாவூர் திரு. கோ. சிவஞானம் "பாவைப் பயன்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். கும்பகோணம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடகசபையார் "ஸ்ரீ வள்ளி" கதையைப் பொம்மலாட்டமாக நிகழ்த்தினர்.

மாயூரம்–வள்ளலார்கோயிலில்

## தருமையாதீன ஸ்தாபனங்கள் சார்பில்

## பாவை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன ஸ்தாபனங்கள் சார்பில் மாயூரம்-வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேஸ்வரசுவாமி ஆலயத்தில் 5, 6, 7—1—64 ஆகிய மூன்று நாட்களில் பாவை மாநாடு மிகச் சிறப்பாக நிகழ்ந்தேறியது.

மின் விளக்குகள் ஒளிதிகழ வண்ணத் தோரணப் பொலிவுடன் மிளிர்ந்த மாபெரும் மாநாட்டுப் பந்தலில் காலை மாலை இருவேளையும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் திருவுள்ளப் பாங்கின்வண்ணம் அறிஞர் பெருமக்கள் பலர் பாவைச் சொற்பொழிவாற்றினர். தேவாரத்திருமுறை இன்னிசைவாணர்களால் மாநாட்டுப் பந்தலில் "பாவைப் பாடல்கள்" உள்ளமுருகப் பாடப்பட்டன. இரவில் நிகழ்ந்த கதாகாலட்சேபம், பொம்மலாட்டம், வில்லுப்பாட்டு. பஜனை முதலிய கலைநிகழ்ச்சிகள் இறையுணர்வைத் தோற்றுவனவாக அமைந்தன. 7—1—64 செவ்வாய் இரவு வேத - திருமுறை பாராயணத்துடன் ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமானின் திருவீதியுலாவும் இனிதே நிகழ்ந்தேறியது மாயூரத்திலும் சுற்றுப்புறங்களிலுமுள்ள அன்பர்கள் திரளாக வந்திருந்து கண்டு கேட்டு இருமைப்பயன் எய்தினர்.

சொற்பொழிவு நிகழ்ச்சிகள் :

5-1-64 ஞாயிற்றுக்கிழமை மாலை தொடங்கிய மாநாட்டிற்கு வேளூர் ஸ்ரீவைத்தியநாதசுவாமிதேவஸ்தானம்கட்டளைவிசாரணை வித்துவான். ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் ஆசியை வெளியிட்டு மாநாட்டைத் துவக்கிவைத்தார்கள்.

முதற்கண் சிறப்புரை ஆற்றிய தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர் செந்தமிழ்ச்செம்மல் திரு. அ. சீனிவாசராகவன் அவர்கள் "திருப்பாவை" என்ற பொருள்பற்றிப் பேசுகையில் 'ஆங்கவர்க்கே பாங்காவோம்' என்ற தொடரை மணிவாசகப்பெருமான் இறையடியார்களின்மேல் வைத்துப் பாடினாரென்றும், ஆண்டாள் இறைவனுக்கே அதனை ஏற்றிப் பாடினாரென்றும். இறைவனுக்கே பாங்காவோம் என்று

பாடினும் தோழியர் கூட்டத்தோடேயே உடன்சென்று அவனருள் பெற விழைந்தாராகையால் அவர் கூற்றும் மணிவாசகர் கருத்துக்கு முரண்பட்டதன்று. இறைவனடிபற்ற அவனடியார் திருவடி பற்றுதல் முதற்படி யென்றும் கூறிப் பல திருப்பாவைப் பாடல்களை இனிதே விளக்கினார்கள்.

'அடுத்து உரையாற்றிய சென்னை பைந்தமிழ்ச்செல்வர் திரு. ச. சிவகுமாரன் "திருவாசகநெறி" என்றபொருளில் பேசுகையில் 'வாழ்க்கைக்கு இலாபம் காண ஒரு முதல் தேவைப்படுவது போல் இறைவனே, உயிர் ஆன்ம இலாபம் பெற முதல ஆகையால், அவன் திருவடிப்பேறே உயிர்களுக்கு இன்றியமையாதது. திருவாசகநெறியை எல்லாம் மணிவாசகர் கண்ட கனவில் சுருங்கச் சொல்வதென்றால் இரண்டே வார்த்தைகளில் கூற முடியும். ஒன்று நாதன் நாமம் நமச்சிவாய; பிறிதொன்று அவன் திருவடிப்பேறு' என்று குறிப்பிட்டுப் பல திருவாசகப் பாடல்களை இனிதே பாடிப் பரவசமூட்டினார்கள்.

இறுதியிற்பேசிய நெல்லை இந்துக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், பைந்தமிழ்ச்செம்மல், வித்துவான், திரு. கு. அருணசலக் கவுண்டர் அவர்கள் "அழுதால் பெறலாம்" என்ற தலைப்பில் பேசுகையில் வெறும் அழுகையால் இறைவனைப் பெற இயலாது. உள்ளும் புறமும் கசிய அழுதால் இறைவனைப் பெறுதல் உறுதி. இவ் அனுபவத்தைப் பலவகைகளில் தெரிவிப்பனவே தேவார திருவாசகங்கள். கள்ளப்புலனைந்தையும் அடக்கி அவற்றையே விளக்கெனக்கொண்டு அழுது பெற்ற திருவருள் அனுபவமே 'திருவாசகம்' என்று குறிப்பிட்டார்கள்.

இரவு 10 மணியளவில் தஞ்சை ஸ்ரீமதி T. R. கமலாமூர்த்தி குழுவினரால் "மாணிக்கவாசகர் வரலாறு" கதாகாலட்சேபமாக நிகழ்த்தப்பெற்றது.

6—1—64 திங்கட்கிழமை காலை 9·30 மணிக்குத் திருவண்ணமலை ஆதீனம் குன்றக்குடி மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சிறப்புரை ஆற்றுகையில் 'மனிதனுக்குப் பெருமை நல்குவது அகச்சூழல், உள்ளமே ஆகும். அதைப் பெருக்கவே நோன்பு, பக்திப்பாடல், திருக்கோயில் மாநாடு போன்ற எல்லாம். ஒரு கோயில் நன்கு இயங்கி வருகின்றதென்றால் அக்கோயிலைச் சுற்றி நல்ல உள்ளங் கொண்ட மக்கள் தொகை விரிவடைதல் வேண்டும். திருவருட் துணையை நாடும்போது ஒரேமூர்த்தியை அது எதுவானாலுஞ்சரி

ஆன்மார்த்தமாக வழிபட்டு உய்திபெறமுயலவேண்டும். இறைவ னையே பாடிய நால்வர்கள் அம்பிகைக்கு எனத் தனியொரு பதிகமும் செய்யாமைக்குக் காரணம் அவர்கள் கொண்ட ஒரு நெறிய மனமேயாகும். நோன்புகளது பயனெல்லாம் உள்ளழுக்குப்போக்குதலேயாகும். ஆன்மாவிற்கு இடையறு வேலை கொடுப்பதே ஒரு நோன்பாகும். இறைவன் அருள்வெள்ளத்தைக் குடைந்து ஆடி உள்ளழுக்கை நீக்கி உய்திபெறுவோமாக' என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்துப் பேசிய புதுக்கோட்டை மகளிர் ஆசிரமம் திருமதி. சிவ. பிருந்தாதேவியவர்கள் 'திருவாசகத்தில் மகளிர்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றுகையில் வேத இதிகாச காலத்தும் சங்க காலம் • நாயன்மார்கள் காலத்தும் பெண்கள் பெருமதிப்புடன் மதிக்கப்பட்டமை தெளிவு. திருவாசகம் கண்ட மகளிர் தாங்கள் மட்டுமன்றி உலகெலாம் வாழ நோற்ற அருங்குண நங்கையர்களாவர். பசுவின் உடலெலாம் பால் நிரம்பி இருப்பினும் அதன் மடிவழி அது சுரக்குமாப்போலே இறைவன் எங்குமுளனுயினும் அவனருள் திருக்கோயிலிலே வெளிப்பட்டு விளங்கும். எனவே தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்களான நாயன்மார்கள் வழி நின்று உலகு உய்தி பெறப் பாடுபடுவோமாக' என்றுர்கள்.

மாலை 6 மணியளவில் தொடங்கிய மாநாட்டில் சென்னைத் திருக்கோயில் ஆசிரியர் புலவர். திரு. N. R. முருகவேள் அவர்கள் 'மார்கழி நீராடல்' என்ற பொருள்பற்றிப் பேசுகையில்' இயற்கையை எல்லாம் இறைவனது திருவடிவாகக் கண்ட அரும் பெரும் ஞானிகள் நம் தவப் பெரும் நாயன்மார்கள். பக்தி வெள்ளத்திற் குடைந்து குடைந்து ஆடி அகப்புற இருளைக் கடிந்து வாழ்வது மனிதனின் அறிவின் பயன் என்று கூறிப் பல எம்பாவைப் பாடல்களை இனிது விளக்கினுர்கள்.

அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் வித்துவான், திரு. அ. நடேச முதலியாரவர்கள் "போற்றியருளுக" என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்துகையில் அரும் பெருஞ்சோதி என்ற தொடரில் உள்ள அருமை பெருமைகள் எவை என்பதைத் தெளிவுடன் விளக்கி அடையமுடியாத அவன் தன்மையை அருமை என்றும் அறிய முடியாத அவன் தன்மையைப் பெருமை என்றும் ஒருவாறு கூறலாம் என்று எடுத்துக்கூறி அவனை அறிவதற்கும், அடைவதற்கும் படியாக நிற்பன திருவாசகம் போன்ற நூல்கள்' என்றுர்கள்.

இரவு 10-மணியளவில் கும்பகோணம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையினரின் 'ஸ்ரீ வள்ளி' பொம்மலாட்டம் நிகழ்ந்தேறியது.

7—1—64 செவ்வாய் காலை பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடம் வித்துவான். தவத்திரு. இராமசாமி அடிகள் "பாவை நெறி" என்ற பொருளில் பேசுகையில் இருபாவைகளும் மக்களை நல்வழிப்படுத்தவே எழுந்தன. உயிர்களெல்லாம் அக இருள் நீங்கி உள்ளொளி பெற்று இறைவன் திருவடி சேர்தலையே வற்புறுத்துகின்றன இருபாவைகளும் என்று குறிப்பிட்டுப் பல பாவைப் பாடல்களை மேற்கோள் காட்டி விரிவுரையாற்றினர்கள்.

மாலை 6-மணிக்குத் துவங்கிய மாநாட்டில் சென்னை கலைமகள் ஆசிரியர், செந்தமிழ்ச்செல்வர், வித்துவான். திரு. கி. வா. ஜகந்நாதன் M.A., அவர்கள் 'ஆங்கவர்க்கேபாங்கு' என்றபொருளில் உரைநிகழ்த்துகையில் பெண்கள் இறைவனுடைய அடியார்களுக்குப் பாங்காவதால் எங்கட்குக் குறையேவாராது என்று நம்பி நோன்பு நோற்றனர். நீராடுகின்ற முறையில் அமைந்தன முதல் எட்டுத் திருப்பாசுரங்கள். ஒன்பதாவது பாசுரத்தில் விண்ணப்பம் விடுக்கின்றனர் கன்னிப் பெண்கள். இறைவனுடைய அடியார்களை அடைந்து அவர்களுக்குத்தொழும்பாய்ப் பணிசெய்தலே இறைவனுக்குச் செய்யும் தொண்டாகும் என்ற திடநம்பிக்கையிலேயே 'ஆங்கவர்க்குப் பாங்கர்வோம்' என்று வேண்டினர் என்று குறிப்பிட்டுப் பேசினர்கள்.

அடுத்து, திருநெல்வேலி முன்னுள் கலெக்டர் திரு. தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் அவர்கள் 'ஏதவனைப் பாடும் பரிசு' என்ற பொருள்பற்றிப் பேசுகையில் இருபாவையும் கூறுவது இறைவனுடைய புகழைப் பாடு, பாடு என்பதே! 'இறைவனை அண்மையில் அடைய வழி இசையே' என்றார் கவிஞர் தாகூர். இசையால், பாட்டால் உள்ளம் ஒருமைப்படுகிறது. இறைவனைக் காவலனாக வைத்துக்கொள்வதால் 'நான்' என்ற அகந்தை அழிகிறது. ஏதவனைப் பாடும் பரிசால் நம்மை மறக்கலாம். நம்மை மறந்தால் இறைவனை அடையலாம். இறைவன் இறைவியுடன் சேர்ந்து காட்சி தருவதே அவனது அருட் குணத்திற்கும் சான்று. 'Nothng is in this world in single' என்பார்கள். எனவே, அர்த்தநாரீசுவரர் வடிவிலேதான் உலகமும், உயிர்களும், அருளும், கருணையும், அனைத்தும் அடங்கியுள்ளது என்றார்கள்.

அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மொழியாராய்ச்சித் துறை, செஞ்சொற்கொண்டல், வித்துவான், திரு. சொ. சிங்கார வேலன் M.A., அவர்கள் 'முன்னிக்கடல்' என்றபொருளில் பேசுகை யில் மணிவாசகப் பெருமானுக்குக் கருமேகமெலாம் இறைவியின் திருவுருவாகவும், மின்னலெல்லாம் அவன் இடையாகவும், வான வில்லெல்லாம் அவன் திருப்புருவமாகவும் மழையெல்லாம் அவளது கருணைப்பெருவெள்ளமுமாகத் தோன்றிய திறத்தை 'முன்னிக்கடலைச்சுருக்கி' என்ற பாட்டால் கூறுகிறார் என்ற கற்பனை நயத்தை அதன் உட்பொருள்களோடு சேர்த்து விளக்கி அறிவில் வல்ல பெரியவர்கள் இயற்கையிலெல்லாம் இறைவனைக் கண்டார்கள் என்ற கருத்தையும் மேற்கோள் பல காட்டி இனிது பேசி முடித்தார்கள்.

இறுதியாகத் திருநெல்வேலி வானொலிப் புகழ், வில்லிசைச் செல்வர் திரு. கே. ஐயம்பிள்ளை குழுவினரால் "ஸ்ரீ ஆண்டாள்" என்ற பொருள்பற்றி வில்லுப்பாட்டு நிகழ்த்தப்பெற்றது.

9—1—64 வியாழக்கிழமை மாலை 6 மணிக்குப் பெங்களூர், தென்னிந்திய மீரா, திருமதி. A. R. ரமணியம்மாள் குழுவினரின் பஜனை நடைபெற்றது.

மாயூரம் வள்ளலார்கோயிலில் என்றும் காணாத வகையில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டுவந்து பாவை மாநாட்டில் கலந்துகொண்டு கண்டும் கேட்டும் வழிபாடு நிகழ்த்தியும் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குரு மகாசந்நிதானம் அவர்கள் அருளால் நடைபெறும் பாவை மாநாடு நல்ல பயனையளித்தது. மக்களிடையே பக்தி வெள்ளத்தைப் பரவச் செய்தது.

பாவை மாநாட்டையொட்டி (7—1—1964) செவ்வாய்க் கிழமை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு காலை தொடங்கி ஏகதின லக்ஷார்ச்சனை நடைபெற்றது. அன்று மாலை ஸ்ரீ வதான்யேசுவர சுவாமிக்குப் பஞ்சமுகார்ச்சனையும், அம்பாளுக்கு நவசக்தி அர்ச்ச னையும், ஸ்ரீ மேதா தட்சிணாமூர்த்திக்கு அஷ்டமூர்த்தி அர்ச்சனை யும் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

**திருநின்றியூரில்:**

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமை யாதீனத்திற்குச் சொந்தமான திருநின்றியூர் ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவரசுவாமி தேவஸ்

தானத்தில் 26—12—63 வியாழக்கிழமை மாலை 6-மணிக்குப் பாவை மாநாடு சிறப்புற நிகழ்ந்தது.

ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், சிரோமணி, வித்துவான். திரு. வி. சபேசன் அவர்கள் "பாவையும் பள்ளி யெழுச்சியும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

குத்தாலத்தில் :

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் பாவை மாநாடு சிறப்புற நிகழ்ந்தது. ஆதீனத் தேவார பாடசாலை மாணவர்கள் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடினர்.

28—12—63 சனிக்கிழமை மாலை 6-மணிக்குத் திருவையாறு சமயப்பிரசாரகர், செய்தியாளர். திரு. ஜி; தனவேலுப் பிள்ளை, "மார்கழி நோன்பு" என்ற தலைப்பிலும், ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், திருநெறிச்செம்மல், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர், "இருபாவை" என்ற தலைப்பிலும், 29—12—63 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்குத் திருக்கருகாவூர், திரு. கோ சிவஞானம், "மணிவாசகர்" என்ற தலைப்பிலும், ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், சிரோமணி, வித்துவான். திரு. வி. சபேசன், "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். பெருமக்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

திருக்கடவூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமை யாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 31—12—63, 1—1—64 ஆகிய இரண்டு நாட்களிலும் பாவை மாநாடு சிறப்புற நிகழ்ந்தது. திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன.

31—12—63 செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம், வித்துவான். திரு. க. வெள்ளைவாரணனார் "பாவைப் பாடல்கள்" என்ற பொருளிலும், பேரளம் கழக

உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான். திரு. எம். குஞ்சிபாத தேசிகர் "மணிவாசகர்" என்ற பொருளிலும், 1—1—64 புதன் கிழமை அண்ணுமலைப் பல்கலைக் கழகம் தமிழ் விரிவுரையாளர், வித்துவான் திரு. அ. நடேச முதலியார், "திருவாசகம்" என்ற பொருளிலும், திருவையாறு கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார், "திருப்பள்ளி யெழுச்சி" என்ற பொருளிலும் சொற்பொழிவாற்றினர். கும்பகோணம் கணநாதர் பொம்மை நாடகசபையினரால் வள்ளித் திருமணம் பொம்மலாட்டமாக நிகழ்த்தப்பெற்றது. பலர் வந்து கேட்டும் கண்டும் மகிழ்ந்தனர்.

## சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம்

# பத்தாண்டு நிறைவு விழா

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தின் பத்தாவது ஆண்டு நிறைவுவிழா 31—12—63 மாலை 6-மணிக்கு ஷை நிலையமன்றத்தில் சென்னை சட்டமன்ற சபாநாயகர், கனம், S. செல்லபாண்டியன், B. A., B. L, அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. வைத்தீஸ்வரன் கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அன்றே நடைபெற்றது. நிலையத் தொண்டின் வளர்ச்சிக்குச் சிறந்ததோர் அறிகுறியாகத் திகழ்ந்தது. முதலில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்குச் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு P. சுவாமிநாதன் அவர்கள் வேலூர்த் தேவாரம், திருப்புகழ், பிள்ளைத்தமிழ் முதலிய அருட்பாடல்களை இசையுடன் ஓதிப் பிரார்த்தனை புரிந்தார். பிறகு ஆண்டுவிழா நிகழ்ச்சி, தருமை ஆதீன இசைப்புலவர், இசையரசு. திரு. M. M. தண்டபாணி தேசிகரவர்களின் கடவுள் வணக்கப் பாடலுடன் தொடங்கியது. ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரைகூறி நிலையம் ஆற்றிவரும் சமயப் பணிகளையும், பத்தாண்டுகளில் நிலையம் அடைந்துள்ள வளர்ச்சியையும் குறிப்பிட்டுத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் ஆசிச் செய்தியையும், சென்னை மாநிலக் கவர்னரின் வாழ்த்தையும் படித்தார்கள், இந்திய அரசாங்க இராஜ்ய அமைச்சர் கனம். ஓ. வி. அளகேசன் முதலிய பலரும் வாழ்த்து அனுப்பியிருந்தனர். நிலையத் திருமுறை வகுப்பு மாணவியர் இருவர் மழலை

மொழியில் இனியதோர் உரையாடல் நிகழ்த்தினர். அவ்வுரையாடல் பன்னிரு திருமுறைகளைப் பற்றியும், அவற்றை அருளிய ஆசிரியர்களைப் பற்றியும், நிலையத் தொண்டுகளைப் பற்றியும் சுவை கமழ விவரித்தது. பிறகு சென்னை மாநில செய்தித்துறை அமைச்சர் கனம். G. பூவராகன், B. Sc. (Hons.) அவர்கள் தொடக்கஉரை நிகழ்த்தினார்கள். நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:-

"இந்த நிலையம் பத்தாண்டுகளாக சமயத்திற்குச் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளது. தமிழகத்தின் தலைநகரில் இப் புனிதப் பணியை நடத்திவரும் ஆதீனத்தின் முயற்சியும், ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளின் சேவையும் பாராட்டத் தக்கது. ஆண்டுமுழுவதும் ஓயாது பணிசெய்து வருகிறது இந்நிலையம், என்னைப்போன்ற அரசியல் துறையில் உள்ளவர்களையும் அடிக்கடி அழைத்துப் பணியில் ஈடுபடுத்திவருகிறது. எல்லாத் துறையிலும் கடமை உணர்ச்சி குறைந்து உரிமை உணர்ச்சி ஓங்கிவருகிறது. சமயப்பிரசாரத்தால்தான் கடமை உணர்ச்சி ஓங்கி உரிமை உணர்ச்சி குறையமுடியும், ஒவ்வொருவரும் கடமையைச் சரியாக ஆற்றினால் எல்லோருக்கும் உரிமை தானே வந்துவிடுகிறது. ஒழுங்கும், கட்டுப்பாடும், நேர்மையும் மக்களிடம் மலர்ந்தால்தான் ஆட்சி நன்றாக நடைபெறமுடியும், சட்டத்தால் கட்டுப்பாடு ஒழுங்கு, நேர்மை முதலியவற்றைச் செயல்படுத்தமுடியாது. கை, கால்களை வேண்டுமானால் சட்டம் திருத்துமே ஒழிய உள்ளத்தைச் சட்டம்போட்டுத் திருத்தமுடியாது. உள்ளத்தையும், வாக்கையும், செயலையும் ஒழுங்குபடுத்த வல்லது தெய்வநம்பிக்கையும், சமய வாழ்வுமேயாகும். சமய உணர்வால்தான் கட்டுப்பாடும், ஒருமைப்பாடும் வளரமுடியும், நிலைத்த அமைதியைக் காணமுடியும், சமயப் பிரசாரத்தால்தான் கடமை உணர்ச்சியைத் தட்டி எழுப்பமுடியும், எனவே சமயப் பிரசாரம் மக்களிடையே கடமை உணர்ச்சியை எழுப்பவும், ஒழுங்கு, கட்டுப்பாடு, நேர்மை இவற்றை வளர்க்கவும் மிகவும் தேவை. சமயச்சார்பற்ற அரசாங்கம் நடைபெறும் நமது நாட்டில் எல்லாச் சமயங்கட்கும் வாய்ப்பு உண்டு, எந்தச் சமயத்திற்கும் யாதொரு குறைபாடும் நேராமல் அரசாங்கம் பாதுகாக்கும். மக்கள் அவரவர் சமயத்தைப் பின்பற்றி வாழ்வதில் சர்க்கார் குறுக்கிடாது", என்று குறிப்பிட்டார்கள். பிறகு சென்னை மேல் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. T. புருஷோத்தமன் அவர்கள் நிலையச் சேவைகளைப் பாராட்டி இத்தகைய நிலையங்கள் ஒவ்வொரு பெருநகரத்திலும் இருக்கவேண்டியது அவசியம் என்றும் வற்புறுத்தினார்கள்.

பிறகு, விழாத்தலைவர் கனம் S. செல்லபாண்டியன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்கள். நிகழ்த்தும்போது "கடவுள் உண்டா? இல்லையா? சமயம் அவசியந்தானா? என்ற கேள்விகள் இன்று நேற்று தோன்றியன அல்ல. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பே தோன்றின. அத்தனைக்கேள்விகட்கும் தாக்குப்பிடித்து ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே சமயம் நிலைத்துவிட்டது. இல்லை என்று சொல்வோர் சான்று தேடப் படிக்கின்றனர். முடிவில் பக்தர்களாகிவிடுகின்றனர். நமது நாட்டில்கூட கடவுள் எங்கே என்று கேட்டவர்கள் இப்பொழுது கடவுள் ஒருவர் உண்டு என்று நம்புகின்றனர். மனிதன் மனிதனுக வாழச் சமயம் அவசியம் வேண்டும். ஆறறிவுபெற்றுள்ள மனிதகுலம் மேம்பாடு அடையச் சமயம் சிறந்த சாதனமாயுள்ளது. சட்டம் என்பது மனித சமுதாயத்திற்குத்தான் இருக்கிறது. எவ்வளவு சட்டங்கள் போட்டாலும் அவற்றை மீறுவதற்கு மனித சமுதாயம் முயற்சிக்கிறது.

திருமுறை ஆசிரியர் 27 பேரும், பன்னிரு திருமுறைகளாலும், தெய்வத்தை மனிதன் எப்படி உணரவேண்டும் என்பதைப் போதித்துள்ளனர். வாழ்வாங்குவாழ வழிவகுத்துள்ளனர். எல்லோரும் நல்லவர்களாயினும் சில சமயங்களில்தான் நல்லவர்களாக இருக்கின்றனர். சில சமயம் தீயவர்களாக மாறுகின்றனர். நிலையாக எப்பொழுதும் நல்லவர்களாக வேண்டுமானல் தெய்வ நம்பிக்கை மிகமிக அவசியம், தெய்வ வழிபாட்டிலும் கலாசாரத்திலும் பழங்காலந் தொட்டே பெருமைவாய்ந்த நாடு இந்தியப் பெருநாடு. எவ்வளவோ மதங்கள் இந்தியாவுக்கு வந்தபோதிலும் அவற்றால் எல்லாம் சிதைக்கமுடியாமல் தழைத்தோங்கி இருந்துவருகிறது இந்துமதம். மேலும் பிரசாரம் இல்லாமலே நிலைத்துநிற்கும் சிறப்பு நமது இந்து மதத்திற்கு உண்டு. இந்தக்கால மாறுபாட்டிற்கு ஏற்ப இந்துமதப் பிரசாரம் அவசியமாகிறது. அரசாங்கம் நிலையாக இல்லாமல் அடிக்கடி மாறுதல்பெறும் என்பதற்காகத்தான் சமயப் பாதுகாப்பிற்கும், சமய ஒழுக்கம் மக்களிடையே பரவுவதற்கும் மடாலயங்கள் தோன்றியுள்ளன. தருமபுர ஆதீனம் சமயப்பிரசாரம் செய்வதிலும், திருக்கோயில்களைப் பாதுகாக்கும் முறையிலும் தமிழகத்திற்கே ஒரு உதாரணமாகத் திகழ்கிறது.

தருமை ஆதீன ஆட்சியில் உள்ள பல கோயில்கட்கும் சென்று தரிசித்திருக்கிறேன். கோயிலுக்குள் சென்றால் திரும்பிவர மனமில்லாமல்தான் திரும்புகிறேன். இந்தப் பிரசார

நிலையம் பத்தாண்டுகளில் சிறந்த சமயப்பணிகள் பலவற்றை இயற்றியுள்ளது பாராட்டத்தக்கதாகும். படித்தவர்கட்கும் முறையாகக் கடவுளை நினைக்க நேரம் இல்லை. இதுபோன்ற நிலையங்கள் இருப்பதால் அவர்கள் மாலை நேரங்களில் கடவுள் வழிபாட்டை அறியவும், தத்துவக் கருத்துக்களை உணர்ந்து ஈடுபடவும் வாய்ப்பு ஏற்படுகின்றன", என்று குறிப்பிட்டார்கள்.

ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் பத்தாண்டுகளாக நிலையத்தோடு தொடர்புகொண்டு பல்லாற்ருனும் உதவி புரிந்து வரும் புலவர்கட்கும், தொண்டர்களுக்கும், அன்பர்களுக்கும் நன்றி தெரிவித்து வாழ்த்துக் கூறினுர்கள். திரு. P. சுவாமிநாதன் கடவுள் வாழ்த்துப்பாடிய பிறகு அனைவருக்கும் வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கப் பெற்றது.

---

## அருளுடை அன்பு முகம்

கவித்தேன்றல், U. R. உமாநாத தீக்ஷிதர்

இராகமாலிகை

பல்லவி

பொங்கும் செல்வம் தங்கும் தருமைக் குருமணியே
எங்கும் இன்பமாய்த் திகழும் அன்புத் திருவுருவே (பொங்கு)

அனுபல்லவி

வேண்டுவார்க்கு புரிந்து வேண்டுபவை ஈந்தும்
கண்ணிமை தன்னிலும் அவன் நாமம் செப்பிடும் (பொங்கு)

சரணம்

யாவரும் நன்கறியா தருமைதன் புகழை
மாநிலம் அறியும்வண்ணம் ஆக்கிய செஞ்சுடரே
தேவரெலாம் உறையும் திருக்கைலை கண்டோய் நீ
மாணிக்க மாய்த்திகழ மன்றீசனைப் போற்றினேன் (பொங்கு)

# எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

आदित्याद्याः ग्रहाः सर्वेसनक्षत्राः सराशयः ।
सर्वान् कामान् प्रयच्छन्तु धर्मकामार्थ सिद्धये ॥

(சோபகிருதுஹூ தைமீ 1உ முதல் 30உ முடிய)

(14—1—64 முதல் 12—2—64)

**1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

அசுவதி நான்கு பாதங்களும் சுப சந்தோஷங்களைத்தரும். மேல் பதவிகள் ஏற்படச்செய்யும். பரணி நான்கு பாதங்களும் மிச்சிர பலனைத்தரும். அதிக செலவினங்கள் ஏற்படச்செய்யும். அடிக்கடி சஞ்சாரபலன் ஏற்படும்' கார்த்திகை முதல் பாதம் ஜீவனலாபம் உத்தியோக உயர்வு பந்துமித்திரர்களுடைய சேர்க்கையும் சுகஜீவனமும் ஏற்படச் செய்யும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½.**

ரிஷபராசி 9 பாதங்களும் சுபசந்தோஷங்களைத்தரும். தன தான்ய விருத்தி ஏற்படச்செய்யும். அடிக்கடி தேவாலய சஞ்சாரங்களும் தர்ம காரியங்களும் நடைபெறும். உலக பிரசித்தி ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾.**

மிருகசிர்ஷம் 3, 4, பாதங்களும் திருவாதிரை நான்கு பாதங்களும் இடம் மாறுதலைத்தரும். நூதன வஸ்திராபரணங்கள் சேரும். ஆரோக்யம் உண்டுபண்ணும்; புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் அதிக செலவினங்களையும் தான்ய நஷ்டத்தையும் உண்டுபண்ணும். சகல காரியங்களும் தாமதமாய் நடக்கும். மனம் சந்தோஷம் இராது. திங்கள் செவ்வாய் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சந்தோஷத்தை உண்டுபண்ணும். எதிர்பாராத சுபமான வெற்றிகளைத்தரும். தனதான்ய விருத்தி ஏற்படும். குடும்பம் ஓங்கும். வித்தியாவிருத்தியாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிர பலனைத்தரும். தொழில் ஓங்கச்செய்யும். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும். வித்தியாவிருத்தியாகும். சகல காரியங்களும் வெற்றியடையும். சனி, ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் தெய்வீகத் தன்மையோடு பிரகாசிக்கச் செய்யும். சொல்ப நஷ்டத்தோடு தனதான்யங்கள், வந்துசேரும். எங்கும் பிரசித்தியும் பரோபகார சிந்தனையும் உண்டுபண்ணும். புத்திராதிகளால் சுகம் உண்டுபண்ணும். குடும்பம் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

சித்திரை 3, 4 பாதங்கள் அதிக செலவினங்களைத் தரும். சஞ்சாரம் உண்டுபண்ணும். சுவாதி நான்கு பாதங்களும். விசாகம் 1, 2, 3 பாதங்களும் தெய்வ பலத்தோடு பிரகாசிக்கச் செய்யும். கடன் நீங்கி சுகம் உண்டுபண்ணும், குடும்பம் ஓங்கும். எதிர்பாராத தனதான்ய விருத்திகள் ஏற்படச்செய்யும். வெள்ளி, சனி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் வம்சாவிருத்தியைத் தரும் குடும்பம் ஓங்கும். பந்துமித்திராதிகளால் லாபம் உண்டு பண்ணும். ஆரோக்யம் உண்டாகும். தொழில்ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் சஞ்சலத்தைத்தரும். ஆனாலும் குடும்பத்தினரால் நன்மை உண்டுபண்ணும். இடம் மாறச்

செய்யும். பூராடம் நான்கு பாதங்களும், உத்திராடம் முதல் பாதமும் இல்லற சுகத்தை விசேஷமாய்த்தரும். தனதான்ய விருத்தியாகும். புத்திராதிகளால் குடும்பம் ஓங்கச்செய்யும். வித்தியாவிருத்தியும் கீர்த்தியும் ஏற்படும். சனி, செவ்வாய் சுபமாகும்.

## 10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் மகத்தான சந்தோஷ வைபவங்களைத் தந்து மேலோர் பெரியோர்கள் அன்பையும் தரும். குடும்பம் ஓங்கச்செய்யும். நஷ்டமான பொருள்கள் தானுக வந்து சேரும். ஆரோக்யம் உண்டாகும். தெய்வபலம் பிரகாசிக்கும்.

## 11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி - $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாதங்களும் இல்லற சுகத்தைப் பலவிதத்திலும் உண்டுபண்ணும். வித்தியாவிருத்தியாகும். நஷ்டமான தனதான்யங்கள் தானே வந்துசேரும். பலரால் கொண்டாடும் தன்மையும் உண்டுபண்ணும். கீர்த்திபத்திரம் கிடைக்கும்.

## 12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபமேயாகும். தூர தேசத்திலிருந்து சன்மித்ராளுடைய சேர்க்கையைத்தரும். ராஜாங்க மூலமாயும் பெரிய லெக்ஷிமிகடாக்ஷம் பொருந்திய பெரியோர்களாலும் கொண்டாடும்படியான தன்மையை உண்டுபண்ணும். குடும்பம் ஓங்கும். சுகவாழ்வு ஏற்படும். சனி, செவ்வாய் சுபமாகும்.

சோபகிருதுஹு தைமீ 1வ மங்களவாரம் அமாவாஸை பூராட நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 28 விஞடி 9க்கு உத்ராயண மகரசங்கராந்தி புண்ணியகாலம் ஸ்ரீ சர்வேசுவரன் அருளால் ஏற்படுவதால் ஷ பிரவேசகால பலன் லோகபிரகாசகரான ஸ்ரீ சூரியபகவான் அருளால் சகல லோகமும் நித்தியமங்களமாயும் தனதான்யஸமிருத்தியோடும் சகலமக்களும் நித்திய ஸந்தோஷத்துடனும் சுகவாழ்வு சுகஜீவனம் செய்துகொண்டும் ஆரோக்கியத்துடனும் தீர்க்காயுளுடனும் தர்மபுத்தியோடும் அவரவர்கள் குலாசார மதாசார சம்பிரதாய சடங்குகளை நடத்திக் கொண்டும் அவரவர்கள் மதாசாரியாள் குலாசாரியார்களையும் அந்தந்த கிராமாலயங்களில் உள்ள

சிவ விஷ்ணு கிராமதேவதைகளை பூஜித்துக்கொண்டும் நல்லோர் பெரியோர்களுடைய ஆசியைப் பெற்றும் தைவீகத்தன்மை யோடு சுககரமாயும் மங்களகரமாயும் உத்ராயண சுப புண்ணிய காலத்தில் மங்களகோஷமும் சந்தோஷ ஆரவாரமும், சதா மக்கள் அனுபவிக்க ஸ்ரீ ஸர்வேசுவரன் அருள்புரிவாராக.

மேற்படி தை மாதத்தைப்பற்றி அதிகம் எழுதவில்லை. சென்ற மாதங்களிலேயே விபரங்கள் எழுதப்பட்டிருக்கிறது. அதே பலன்கள்தான் நடந்து வருகிறது. உலக மக்கள் எல் எல்லோரும் ஒன்று சேர்ந்து தமக்கு இருக்கும் வேற்றுமைகள் அனைத்தையும் மறந்து சோதர பாவத்துடன் உலக க்ஷேமத்தின் பொருட்டும் பரசக்கிர பயம் வராமலும் துர்பிக்ஷம் அகால மரணங்கள் நேரிடாமலும் தான்ய விருத்தி, தன விருத்தி சுக ஜீவனம் லக்ஷ்மீகடாட்க்ஷம் ஏற்படுவதை முன்னிட்டும் முன் தெரிவித்தபடியே காலதாமதமில்லாமல் மகாசனங்களும் மதா சாரிய புருஷாளுடைய அனுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டு ஒன்று சேர்ந்து மகாயக்யங்கள் தேவதார்ச்சனைகள் சிவகேசவ பராசக்தியின் பக்தி முதலியவைகளை சிரத்தையாகவும் கடமை யாகவும் ஆங்காங்கும் சதா செலவுகளைப் பார்க்காமல் செய்து கொண்டு எல்லா பாரத்தையும் சர்வேச்வரனிடம் ஏகமனதாக ஒப்புவித்துவிட்டு அவரவர்களுக்கு ஏற்பட்ட கடமைகளை நடத்தி வர சகல பயமும் நீங்கி சுபிக்ஷங்களுடன் மக்கள் சுகவாழ்வு நடத்திக்கொண்டு சௌக்கியமடைவார்கள். மங்களமுண்டாகும்.

பொங்கலோ பொங்கல். பால் பொங்குக.

சுபம்.

---


## குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல் வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,

"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

## சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்

# திருக்கடவூர் சங்காபிஷேகப் பிரசாதம் வழங்குவிழா

கார்த்திகை மாதக் கடைசி சோமவாரத்தன்று 9—12—63ல் வழக்கம்போல் திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமிக்கு ஆயிரத்தெட்டு சங்குகொண்டு அபிஷேகம் செய்யப்பெற்ற தீர்த்தப் பிரசாதமும் திருவருட்பிரசாதமும் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 10—12—63 மாலை 7 மணிக்குச் சென்னை முன்னாள் பப்ளிக்சர்விஸ்கமிஷன் தலைவர் திரு. ப. இரத்தின முதலியார் B. A., B. L., அவர்கள் தலைமையில் திருக்கடவூர்த் தேவாரம், அபிராமி அந்தாதி பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கப்பட்டது. நிலையத்திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. P. சுவாமிநாதன் கடவூர்த் தேவாரப் பிரார்த்தனை நிகழ்த்தினார். தலைவர் தமது தலைமையுரையில் மார்க்கண்டேயருக்காக இறைவன் காலனைச் சம்ஹாரம் செய்த சிறந்த தலம் திருக்கடவூர் என்றும், காலபயம் நீக்கும் கடவுட் பிரசாதம் சென்னையில் உள்ளவர்கட்குக் கிடைக்குமாறு கிருபைசெய்து வரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைமகாசந்நிதானத்திற்கு சென்னைவாசிகள் நன்றிகலந்த வணக்கம் செலுத்தக் கடமைப் பட்டவர்கள் என்றும் குறிப்பிட்டார்கள். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் திருக்கடவூர்ப்பெருமையையும், சோமவார விரதமகிமையையும் கூறி நன்றி தெரிவித்தார்கள்.

## மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு சென்னை மீனம்பாக்கத்துக்கு அருகில் உள்ள திருசூலத்தில் 12—1—1964 ஞாயிறு மாலை 4·மணிக்குச் சிறப்பாக நடைபெறும்.

# முக்கிய கவனிப்பு

## சிவராத்திரி நிர்ணயம்

ஸ்தாபனம் புரோக்ஷணம் தீக்ஷா
சிவராத்ரி : சிவோத்ஸவ : ।
சௌரமாசேதுகர்த்தவ்ய :
சாந்திரமானேப்ரசஸ்தக : ॥

ஸ்தாபனம், சம்புரோக்ஷணம், தீக்ஷை, சிவராத்ரி, சிவோத்ஸவம் என்பவை சௌரமாசத்தில் செய்யத்தக்கன, சாந்திரமானம் தள்ளத்தக்கன. என்று வீராகமமும் சித்தாந்த சேகரமும் விதிக்கின்றன.

துலாஸ்நானமுஷாப்யங்கம் கிருத்திகா தீபமேவச ।
தனுர் மாசிஹரே : பூஜா சிவராத்திரி வ்ருதம் ததா ।
சௌரமானேன கர்த்தவ்யம் சாந்திரமானே நகாரயேத்.

துலாஸ்நானம், நரகசதுர்த்தசியில்உஷக்கால அப்யங்கம் கார்த்திகைவிளக்கிடு, தனுர்மாசபூஜை சிவராத்திரி விருதம் என்பன சௌர மாசத்தில் செய்யத்தக்கன. சாந்திரமானத்தில் செய்யக்கூடாது என்று தருமசாத்திரச் சுருக்கம் கூறுகின்றது.

த்விஜாதீனும் சாந்திரமானே வ்ரதான்யபி பலந்திஹி ।
உபாகர்மஞ்ச பித்ரியஞ்ச சிவராத்ரிவிருதம் விநா ॥

பிராமணர் முதலியோருக்குச் சாந்திரமானத்திலே செய்யப்படும் விரதங்களும் பலிக்கின்றன. ஆனல் உபாகர்மம் பித்ருச்ராத்தம், சிவராத்ரி விருதம் நீங்கலாக, என்று சைவபுராண வாக்கியத்தினல் அறியப்படுகின்றது.

இது போன்ற பல வாக்கியங்களால், மகாசிவராத்ரி விருதம், சௌரமான மாசிமாதத்தில் தான் செய்ய வேண்டும் என்பது சித்தாந்தம். எனவே இந்த சோபகிருது ஆண்டு மாசி மாதம் 29௳ (12—3—64) வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பெறல் வேண்டும் என்பது நிச்சயமாகின்றது. ஆஸ்திகர்கள் அனைவரும் சிவாகமங்களில் கூறியபடி இவ்வாறே சிவாலயங்களிலும் ஆன்மார்த்தத்திலும் அனுஷ்டித்து இம்மை மறுமைப்பயன்களைப் பெறுவார்களாக.

சு. சுவாமிநாதசிவாசாரியர்.
தருமை.

nted & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-1-64.